V3 : No.2 9 Jan 1930.

JL
N30.3.2
189086

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 8 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ஞு ஜனவரி மீ 9உ [No. 2.

5-FEB

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 21
2. அப்பர் (அவிநயக் கலை)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 23
3. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனாட்சிசுந்தரம் M.A., B.L., 25
4. நம்மாழ்வார் வைபவம் (சுத்தாத்ம தர்சனம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 27
5. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 29
6. அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை (புனைந்துரை)
E. N. பத்மாவதி அம்மாள் B. A. 31
7. இலஞ்சிப் பாவை (பாவையைக் காணல்)
T. S. நடராஜபிள்ளை, B. A., B. L 33
8. கம்பராமாயணம் (மந்திரப் படலம்)
T. N. சேஷாசலம் B. A, B. L. 34
9. வர்த்தமானம் 39

இன்று முதல் அனுப்பிவருகின்ற வி. பிக்களைச் சந்தாநண்பர்கள் தவக்கமின்றிப் பெற்றுக்கொள்வர் என நம்புகின்றோம். மலேயா முதலிய அயல் நாடுகளுக்கு வி. பி. இல்லையாதலால் அங்கிருப்பவர் உடனே தம் சந்தாவை மணியார்டர் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மானேஜர்.

கலா நிலயம்

அறியாமை வேண்டப்படும்.

189086.

I

'இத்துணை யறிந்துளேன் யான்' என்பா னல்லன் அறிவாளி. ஏனெனில், கல்வி கேள்வி முதலிய உதவிகளால் தெரிந்துகொண்டுள விடயங்களின் மிகுதியே அளவையாகத் தன்னறிவை மதித்துக்கொளல் ஆன்றோர் வழக்கன்று. 'கற்றது கைம்மண் ணளவு கல்லாத துலகளவு' என்னுமக் கொள்கையை மனத்தில் வைத்து இதனை நாம் இதுபோது இயம்புகின்றோமல்லோம். இவ்வாசகம் கல்வியின் அளவை ஒப்பு நோக்கிக் கூறுகின்றதேயன்றி அறிவினைக் குறிப்பதன்று. கல்வியறிவு என்று ஒருதொடர் வழங்கப் பெறுகின்றதேனும், கல்வியும் அறிவும் வேறுவேறு தன்மையன. கல்வியால் பற்பல விடயங்களைத் தெரிந்துந் தெளிந்துங் கொள்ளலாகலாம். எனினும், விடயங்களைப்பற்றி நாம் தேர்ந்து தெளிந்திருக்கின்ற அளவு, நாம் கற்றுள கல்வியின் அளவைக் காட்டுமே யல்லாது நாம் பெற்றுள அறிவின் அளவைக் காட்டுகின்றதில்லை. ஏனெனில், ஒருவனது அறிவுநிலை அவன் தெரிந்து பயின்றுள விடயங்களினால் நேரே யெய்திய பயனன்று. இத்தேர்ச்சியும் பயிற்சியும், நாவன்மை செய்கைத்திறம் முதலிய பயன்களை அளிப்பதுவே திண்ணம். மற்று, எல்லாப்படியாலும் யாவர்மாட்டும் அறிவைத் தந்தன என்பது அத்துணை நிச்சயமென் றுரைப்பதற்கோ இடமில்லை.

ஆயின், ஒருவனது அறிவை எது கொண்டளப்பது என்னும் கேள்வி பிறப்பது இயற்கையே. ஒருவன் மற்றவனது அறிவை அளக்கவேண்டுமாயின் அதற்கேற்ற கருவி இதுதானென்று உணர்ந்துகூறல் அருமை. சாதாரணமாக உலகநடையில் மனிதன் தன்னையேகொண்டு மற்றவனது அறிவை அளந்து வருகின்றானென்பது எவருக்குந் தெரிந்ததே. இப்படி அளந்தளந்து மற்றவரனைவரும் தனக்குக் குறைந்த அறிவினர்களாகவே இருக்கின்றாரென்று ஒவ்வொருவனும் முடிவுசெய்து கொள்கின்றான். எதுவே யாயினுஞ் சரி, "ஓ, எனக்குத் தெரியுமே" என்று விளம்பிக்கொள்கின்ற வீணர்கள் தவிர ஏனையோர், தமக்குத் தெரியாதன சில வுள வென்பதை ஒப்புக் கொள்வாரேனும், அறிவுவரையில் யாவரினும் உயர்ந்தவன் தானே என்று எண்ணிக் கொள்ளாதவன் ஒருவனைக் காண்பதற்கு நெடுந்தூரம் பெருங்காலந் தேடவேண்டும். இது உலகவியல்.

ஆனால், மற்றவர்களுடைய அறிவை அளக்கின்ற விடயத்தைப் பற்றிநா மிங்குத் தொடர நினைத்திலம். அயலானது அறிவோடு தன்னுடைய அறிவை ஒப்பு நாக்கி அளக்கின்ற கொள்கை எவ்வாருயினும் ஆகுக; அவனவன் தன்னுடைய அறிவைத் தேர்ந் தளந்துகொள்ள வேண்டியதே மிகவும் முக்கிய மானது. சென்ற ஆண்டு நாம் கல்சரைப்பற்றி எழுதிய கட்டுரைகளில் மனிதனுக்கு இயற்கையாயுள்ள சக்திகளில் சுயஆராய்ச்சியும் ஒன்று என்பதை விரிவாக உரைத்துளோம். இந்தச் சக்தியைக் கையாளப் பயின்றவன், தன்னையே தனக்கு ஓர் அயலான்போல் பாவித்துத் தன்னுடைய குணம் செயல் எண்ணங்களைப் புறத்தினின்று தானே பார்த்துத் தேர்ந்து அவைகளது உண்மைநிலையை உணர்ந்துகொள்ளக் கூடியவனுவான். ஆயின் அப்பொழுதே தனக்குள அறிவை மிகையுங் குறையுமின்றி உள்ளவாறு அளக்க இயலும். இவ்வாறு செய்பவேண்டுவதன் அவசியம் அளவிடற் பாலதன்று. தன்னுடைய வாழ்க்கையும் தன்னைச்சூழ்ந்துள மற்றவர் வாழ்க்கையும் கைப்புருமல் நடப்பதற்குச் சான்ருேர் செப்பியுள்ள சாதனங்களிலெல்லாம் முதன்மையானது இதுவே. தன்னறிவு எத்துணைத்தென்பது உணரத் தன் நெஞ்சமல்லது வஞ்சமற்ற துணை வேறில்லை. ஆதலான் அளப்பதற்கோ பொய்க்காத பேருதவி அருகிருப்ப, அளவைக் கருவியைத் தேர்ந்துகொண்டு அதனை எடுத்துக் கையாள வேண்டுமென்ற மனம் ஒன்றே வேண்டும். எனின், பிறிதொரு குறையில்லை ; இவ்வையகம் இனி மறுகுருது.

அறிவை அளக்கின்ற கருவி அறியாமையே. உலகமெல்லா யுரைத்தவாசக மிதுவென வெண்ண வேண்டா. தன்னுடைய அறியாமையை அறிந்தவனே அறிஞன். ஒருவன் தெரிந்துகொண்டன பலபல இருப்பினும், தெரிந்திருக்கும் இவைகளைக்கொண்டு மேல் இனித் தெரியவேண்டியன யாவை என்னும் கேள்வி யெழவில்லையாயின் அவன் தன்னுடைய அறியாமையை உணராதான் ஆகின்ருன்; ஆதலின் அவன் அறிஞனல்லன். இப்படியே ஒவ்வொரு படியிலும் நின்று மேல் அறிதற்கிருப்பனவற்றை நினைக்குங்கால், முன் அறிந்ததாய்க் கருதப்பட்டனவெலாம் முழுமையற்றுத் தோன்றுமாகையால், எப்புறத்திலும் அறியாமையல்லால் தானறிந்தது ஒன்றுமில தென்பதை ஓர்வான். எவ்வளவிற்கு எவ்வளவு தன் அறியாமை மிகுதியாக இருக்கின்றதென்பதை உணர்கின்ருனே அவ்வளவிற்கு அவ்வளவு அவனுக்கு அறிவு உளது என மதிக்கலாம். ஆதலாற்ருன், விடயஅறிவின் அளவாலன்றி அறியாமையைக் கொண்டே அறிவை அளத்தல்வேண்டுமென வற்புறுத்தினேம்.

ஆயின், 'தனக்கொன்றுந் தெரியாது' என்று எவனும் எளிதில் எண்ணிக்கொள்ளலா மாகையால் தன்னுடைய அறிவு அதிகமென்று அளந்துகொள்ளல் மிகவும் எளியதோர் கருமமாயிற்றே என்று சிலர் நினைக்கலாம். இதற்குரிய விடை இருதிறத்தன. நற்கருமங்களெல்லாம் செயற்கு எளியனவே; எனினும் எளியகருமங்களை அனைவரும் செய்துவிடுகின்றனர் என்னும் நியதியில்லை. வறுமையுற்ருேன் ஒருவன் வந்து இரக்குங்கால் அவனுக்குக் கொடுத்தலே எளிது. கொடுக்கும்படியே நமது மனந் தூண்டுகின்றது. இயற்கையாய் யாவர்மாட்டு மிருக்கின்ற தருமசிந்தனை என்னும் அம்சத்தின் செய்கை யிது. இயற்கைநெறி ஒழுகுவதனினும் எளிது வேறில்லை. ஆயினும் அவ்விரவலனுக்குக் கொடுக்காமல் மறுப்பது இயற்கைக்குமாருக வலிந்துசெய்கின்ற செய்கையாம். கொடுப்பவன் எளிதில் கொடுத்து விடுகின்ருன். கொடுக்காதவன்தான் மிகவுங் கஷ்டப்பட்டு மறுக்கின்ருன். இது உண்மையென்று தேர்வதற்கு நம் வாசகர்கள் தங்களுடைய அனுபவத்தைச் சிறிது சிந்தித்துச் சோதனை புரிந்துகொள்ளல் வேண்டும். எனின், ஈவது எளியதாயும், கரப்பது அரியதாயுமிருக்க மக்கட் தொகுதியில் கரத்தலே அதிகமாகக் கையாளப் படுவதை நாம் காணவில்லையோ. இதன் காரணத்தை இங்கு நாம் ஆராயநினைக்கவில்லை. சுலபமாயிருத்தலாலேயே மாந்தர் ஒன்றினை மேற்கொள்வர் என்றநியதி இல்லாமைக்கு உதாரணமாகவே இதுஇங்குக் காட்டப்பட்டது. மற்று, தன்னுடைய அறியாமையின் அளவை உணர்ந்துகொள்ளல் அவ்வளவு சுலபமுமன்று. பொதுவாக அறியாமை அதிகம்உளது என்று நினைத்துக்கொள்வதுமட்டுமே அறிவை அளப்பதற்கேற்ற கருவி ஆகாது. "இன்னது இன்னது யான் அறியேன், ஆதலால் முன் நான் அறிந்ததாகப் பாவித்திருந்ததும் அறியாமையே ஆகின்றது" என்பதும் உணர்தற்கேற்ற ஆற்றலும் வேண்டும். ஒருவனைப் பார்த்து, "நீ அறிந்ததைச் சொல்" என்ருல் எவனும் எளிதில் இரண்டொன்று சொல்லிவிடுவான். மற்று அவனையே மீண்டும், "இதன்மேல் நீ அறியவேண்டி நிற்பன எவை" என்று கேட்போமாகில் அதற்குத் தக்கமறுமொழி தரவல்லவன் ஆயிரத்திலொருவன் அகப்படுவதும் அருமை.

இந்த அறியாமையின் தன்மை வகை அளவு முதலியவைகளை அறிவுறுத்துவதுதான் கல்வி. கல்வியென்ற சொல்லை நாம் இங்கு மெய்க்கல்வி யென்னும் பொருளில் பயில்கின்ருமே யன்றி அப்பெயரால் பாடசாலைகளில் நடைபெறுகின்ற பொய்யினை நாம் குறிக்கவில்லை. மெய்க்கல்வியின் இலக்கணத்தை நாம் இவ்விதழ்களிற் பன்முறை விளக்கியுளோ மாதலின் மீண்டு மிங்கு விரித்துரைத்தல் மிகை. "மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு" என்ருர்வள்ளுவர். கல்வியால் ஊறுகின்ற இவ்வறிவுதான் நமது அறியாமையை அளந்து காட்டவல்ல வறிவு. எனின், அறிவு என்னுஞ்சொல் அதற்கு நேர் எதிர்ப்பதமாக அறியாமை என்னும் பொருளையே இக்குறளிற் குறிக்கின்றது. இத்தகைய விபரீதங்களுக் கிடையேதான் உண்மையை உள்ளவாறு உணர இயலும். பின் னோர்குறளில் வள்ளுவனுர், "அறிதோறும் அறியாமை கண்டற்று" என்பர். இந்த வாசகம் விளம்பிய நாயனுரது ஆழ்ந்த அநுபவம் ஆராய்ச்சி புலமை முதலியவைகளையும், புணர்ச்சி மகிழ்தற் கிதனை எடுத்துக்காட்டுவமையாய்க் கூறிய நயத்தினையும் நினைப்பார் காங்கள் அவரை யறியாமற் சிரமேற் புகுந்து குவிதல்வேண்டு மென்பதற் கையமில்லை. "கற்றனைத்தும் ஊறும் அறிவு" என்ற விதியினையும், "அறிதோறும் அறியாமை கண்டற்று" என்ற விளக்கத்தையும் தொடர இணைத்துக் கருதுங்கால், கல்வியால் அறிவு ஊற, அவ்வறிவால் அறியாமையைக் காணலாகும், என்ற கொள்கை எதிர் வந்து நிற்கின்றது. ஆதலின் நேர்மையான கல்வியின் தொழில், உலகத்தார் இப்பொழுது உபயோகமுள்ள தென்று மதித்துவருகின்ற சிலவற்றைத் தெரிய வைப்பதன்று—நம்முடைய அறியாமையை நமக்குக் காட்டித்தருவதே யாகும், எனின், கற்கக்கற்க அறிவு அதிகமாகின்றது என்பதன் பொருள், கற்கக்கற்க மாந்தர் தம் அறியாமையின் அளவை அதிகம் அதிகமாகக் காணவேண்டும் என்பதன்றி வேறன்று. இவ்வறியாமையைக் காணவல்லவராகின்ருராதலால் கண்ணுடையராகின்ருர் கற்ருேர். தமக்குத் தெரிந்தவை யெவையெவை யெனத் தேர்வதனினும், நமது அறியாமை யெவையென உணர்தலே உலகினதமைதிக்கு அலகிலா உதவியாய் நிற்கவல்லது. அஃதெவ்வாறென அடுத்தநாள் சிறிது ஆய்வோம்.

அப்பர்

1. அவிநயக்கலை (Dancing, Dumb-show)

i இதன் கருவிகள்.

அகத்தினழகு முகத்திற் றெரியுமென்பது யாவருமறிந்ததே. ஆனால் நாககரிகம் ஏற ஏற, உள்ளத்திலிருப்பதனை வெளியிற் காட்டாமல் உள்ளொன்றும் புறமொன்றுய் நடிக்க ஏற்பட்டனர். அதாவது உலகத்தோரை ஏமாற்று நிமித்தம் உள்ளத்திலிருப்பது ஒன்ருனல், வேறொன் றிருப்பதாய்க் காட்டவும், அதனுல் பொய்யரென்று பேர் பெருதொழியவும், உலகவின்பங்களைச் சுயநலச் சொரூபியாய் அனுபவிக்கவும், நல்ல கலை அவிநயமாகும். இது நாடக மேடைகளில் மாத்திரமன்று, எவ்விடங்களிலும் காணக்கூடிய கலை. உள்ளொன்றும் புறமொன்றுமா யிராத முழுமுதற் கடவுளிடத்தில் மாத்திரமே இக்கலை அபிவிருத்தி யடையவில்லை போலும். இது பற்றியே, அப்பர்

10-வது பக்கத் தொடர்ச்சி.

" குனித்த புருவமும் கோவ்வைச்
        செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன்
        மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற்
        பாதமுங் காணப்பெற்ருல்
மனித்த பிறவியும் வேண்டுவ
        தேயிந்த மாநிலத்தே " என்றும்,

முடிகொண்ட மத்தமு முக்கண்ணி
        னேக்கு முறுவலிப்பும்
துடிகொண்ட கையுந் துதைந்தவெண்
        ணீறுஞ் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்
        தோலுமென் பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக்
        கூத்தன் குரைகழலே "

என்றும் பாடினுர்.

அவிநயக் கலையில் மிகவும் பயன்படுவது கண்களேயாகும். ஆடவர்களைவிட மாதரார் கண்கள் மிகவும் கூர்மையாயினவாதலால், அக்கண்களே அவிநயத்திற்கு முதற்கருவியாம். தலைக்கோலரிவைக்குத் துணையாய் வரும் தோரியமடந்தையர் முதலானேர்போல் கண்களுக்கு, மூரல் பவளவாய் முறுவல் முதலியன உதவிக் கருவிகளாம். அவிநயக் கலையில் நாவானது அடங்கி யாதொரு தொழிலுஞ் செய்யாது நிற்கும். வாயின் ஏனைய பாகங்களும், மூக்கும், கண்களும், சிறுபான்மை செவியும், அவிநயத்திற் பயன்படு மென்பர் கலைவல்லோர்.

ii சுவை

அவிநயமென்பது நாடகத்தமிழில் பதினென்கு * விலக்குறுப்புகளெனஎடுக்கப்பட்டனவற்றிலொன்று.

" விலக்குறுப் பென்பது விரிக்குங் காலை
பொருளும் யோனியும் விருத்தியுஞ் சந்தியும்
சுவையுஞ் சாதியுங் குறிப்புஞ்சத் துவமும்
அவிநயஞ் சொல்லே சொல்வகை வண்ணமும்
வரியுஞ் சேதமு முளப்படத் தொகைஇ
யிசைய வெண்ணி னீரே ழுறுப்பே "

இவற்றுள் சுவை என்பது ஒன்பதுவகைச் சுவை யவிநயங்கள். அவை வீரச்சுவையவிநயம், பயச்சுவை யவிநயம், அற்புதச்சுவை யவிநயம், இன்பச்சுவை அவிநயம், அவலச்சுவையவிநயம், நகைச்சுவை யவிநயம், நடுவுநிலைச்சுவை யவிநயம், இழிப்புச்சுவை யவிநயம் உருத்திரச்சுவை யவிநயம் என்பன. இவற்றில் உருத்திரச்சுவை அவிநயம் நீங்கலாக, ஏனையசுவை யவிநயங்களுக்குச் சூத்திரங்கள் உள அவற்றைச் சிலப்பதிகாரம், அடியார்க்குநல்லார் உரையில் (அரங்கேற்று காதையில்) கண்டறிந்துகொள்ளலாம். அவற்றிற் சில தேவாரத்தில் இராவணனைப்பற்றிய பாசுரங்களாலேயேயும் உதாரணங்கள் ‡ காட்டலாகும் அவற்றிற் சில கூறுவோம் :—

வீரச்சுவை யவிநயம்: -

" வீரச்சுவை யவிநயம் விளம்புங் காலை
முரித்த புருவமும் சிவந்த கண்ணும்
பிடித்த வாளுங் கடித்த வெயிறு
மடித்த வுதடுஞ் சுருட்டிய நுதலுந்
திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை
யெண்ணல் செல்லா விகழ்ச்சியும் பிறவு
நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே "

(உ - ம்)

(i) கருத்தனுய்க் கண்சிவந்து கயிலைநன் மலையைக் கையால்
எருத்தனு யெடுத்தவாறே யேந்திழை யஞ்ச வீசன்
திருத்தனுய் நின்ற தேவன் றிருவிர லூன்ற வீழ்ந்தான்
வருத்துவா னூன்றினுனேன்மறித்துநோக்கில்லையன்றே
திருக்கைலாயம்-திருநேரிசை 7.

(ii) கடுகிய தேர்செலாது கயிலாயமீது
        கருதேலுன்வீர மொழிநீ
முடுகுவ தன்றுதன்ம மெனநின்று பாகன்
        மொழிவானைநன்று முனியா
விடுவிடு வென்றுசென்று விரைவுற்றரக்கன்
        வரையுற்றெடுக்க முடிதோள்
நெடுநெடு விற்றுவீழ விரலுற்றபாத
        நினைவுற்றதென்றன் மனனே
தசபுராணம் - 11.

அச்ச வவிநயம்:—

அச்ச வவிநய மாயுங் காலை
யொடுங்கிய வுடம்பு நடுங்கிய நிலையு
மலங்கிய கண்ணுங் கலங்கிய வுளனுங்
கரந்துவர லுடைமையுங் கையெதிர் மறுத்தலும்
பரந்த நோக்கமு மிசைபண் பினவே.

(உ - ம்) மனத்தினுற் றிகைத்து நாளு
        மாண்பலா நெறிகண்மேலே

* " பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்து " அரங்கேற்றுகாதை—வரி 13.

‡ தேவாரத்தில் பாசுரங்கள் கடவுளைப் போற்றுவதில் சில சொற்றொடர்களே இச்சுவை யவிநயவிலக்கணங்களைச் சிறிது குறிப்பிடுமேயன்றி, இவற்றைச் சூத்திரங்களுக்கு எவ்வகையினும் பொருத்தமான இலக்கணச் சூத்திர உதாரணங்களாய்க் கொள்ளற்க.

கனைப்பரா லென்செய்கோபான்?
கறையணி கண்டத்தானே!
தினைத்துணை வேதங்குன்றாத்
தில்லைச்சிற் றம்பலத்தே
அனைத்துநின் நிலையங்காண்பா
னடியனேன் வந்தவாறே.

கோயிற் றிருநேரிசை - 8.

காம வவிநயம்

"காம வவிநயம் கருதுங் காலைத்
தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலுங்
காரிகை கலந்த கடைக்கணுங் கவின்பெறு
மூரன் முறுவல் சிறுநிலா வரும்பலு
மலர்ந்த முகனு மிரந்தமென் கிளவியுங்
கலந்த பிறவும் கடைப்பிடித் தனரே"

(உ - ம்) (i) மழலை தான்வரச் சொற்றெரி கின்றிலள்
குழலி னேர்மொழி கூறிய கேண்மினோ!
அழக னேகழிப் பாலையெம் மண்ணலே
இகழ்வதோவெனை யேன்றுகொளென் னுமே!

திருக்கழிப்பாலைத் திருக்குறுந்தொகை - 3.

(ii) முதிருஞ் சடைமுடிமேன் மூழ்கு
மிளநாக மென்கின் றாளால்
அதுகண் டதனருகே தோன்று
மிளமதிய மென்கின் றாளால்
சதுர்வெண் பளிக்குங் குழைகாதின்
மின்னிடுமே யென்கின் றாளாற்
கதிர்முத்தஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

திருக்கழிப்பாலை - பண் - காந்தாரம் - 7.

அற்புத அவிநயம்

"அற்புத வவிநயம் அறிவரக் கிளப்பிற்
சொற்சோர் வுடையது சோர்ந்த கையது
மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய
தெய்திய திமைத்தலும் விழித்தலு மிகவாதென்
றையமில் புலவ ரறைந்தன ரென்ப"

(உ-ம்) மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்த்துன்னைப் போற்றிச்
சயசய போற்றியென்னும்
கைதா னெகிழ விடேனுடை
யாயெனைக் கண்டுகொள்ளே

—திருவாசகம்

இவை சுவை யவிநயங்களாம். சுத்த அவிநயங்கள், அதாவது, சுவைக்கு யாதொரு சம்பந்தமின்றி யாடிக் காட்டப்படுவன இருபத்திநான்கு வகைத்து என்பர். அப்பாவகங்களாவன—வெகுண்டோனவிநயம், ஐயமுற்றோனவிநயம், சோம்பினோனவிநயம், களித்தோனவிநயம், உவந்தோனவிநயம் அழுக்காறுடையோனவிநயம் தெய்வமுற்றோனவிநயம், ஞஞ்ஞையுற்றோனவிநயம், இன்பமுற்றோனவிநயம், சிந்தையுடம்பட்டோனவிநயம், உறங்கினோனவிநயம், துயிலுணர்ந்தோனவிநயம், செத்தோனவிநயம், மழைபெய்யப்பட்டோனவிநயம், பனித்தலைப்பட்டோனவிநயம், உச்சிப்பொழுதில்வந்தோனவிநயம், நாணமுற்றோனவிநயம், வருத்தமுற்றோனவிநயம், கண்ணோவுற்றோனவிநயம், தலைநோவுற்றோனவிநயம், அழற்றிறம்பட்டோனவிநயம், சீதமுற்றோனவிநயம், வெப்பமுற்றோனவிநயம், நஞ்சுண்டோனவிநயம். இவற்றில்சில கூறுதும்:—

வெகுண்டோ னவிநயம்

வெகுண்டோ னவிநயம் விளம்புங் காலை
மடித்த வாயும் மலர்ந்த மார்பும்
துடித்த புருவமும் சுட்டிய விரலுங்
கன்றின வுள்ளமோடு கைபுடைத் திடுதலு
மன்ன நோக்கமோ டாய்ந்தனர் புலவர்"

(உ - ம்) மாதி யன்று மனைக்கிரு வென்றக்கால்
நீதி தான்சொல நீயெனக் காரெனுஞ்
சோதி யார்தரு தோணி புரவர்க்குத்
தாதி யாவளு னென்னுமென் றையலே:

—திருத்தோணிபுரம் - திருக்குறுந்தொகை 1

ஐயமுற்றோ னவிநயம்

"பொய்யில் காட்சிப் புலவோ ராய்ந்த
வைய முற்றோ னவிநய முறைப்பின்
வாடிய வுறுப்பு மயங்கிய நோக்கமும்
பீடழி புலனும் பேசா திருத்தலும்
பிறழ்ந்த செய்கையும் வான்றிசை நோக்கலும்
அறைந்தனர் பிறவும் அறிந்திசி னோரே"

(உ-ம்) புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மே லுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செய்வா னமருங் கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவை யாறே

—சம்பந்தர்

உவந்தோ னவிநயம்:—

உவந்தோ னவிநயம் உரைக்குங் காலை
நிவந்தினி தாகிய கண்மல ருடைமையு
மினிதி னியன்ற வுள்ள முடைமையு
முனிவி னகன்ற முறுவனகை யுடைமையு
மிருக்கையுஞ் சேறலுங் கானமும் பிறவு
மொருங்குட னமைந்த குறிப்பிற் றன்றே"

(உ-ம்) பூத்தன பொற்சடை பொன்போன்
மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி யரித்தன
பல்குறட் பூதகணந்
தேத்தென வென்றிசை வண்டுகள்
பாடுசிற் றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல் லாருளரோ
வென்றன் கோல்வளைக்கே.

கோயில் - திருவிருத்தம் - 6.

சிந்தை யுடம்பட்டோ னவிநயம்

"சிந்தையுடம் பட்டோன விநயம் தெரியில்
முந்தை யாயினு முணரா நிலைமையும்
பிடித்த கைமே லடைத்த கவினு
முடித்த வுறாத கரும நிலைமையுஞ்
சொல்லுவது யாது முணரா நிலைமையும்
புல்லுமென்ப பொருந்துமொழிப் புலவர்"

(உ - ம்)

கண்டவா திரிந்து நாளுங் கருத்தினு னின்றன் பாதங்
கொண்டிருந் தாடிப் பாடிக் கூடுவன் குறிப்பினாலே
வண்டுபண் பாடுஞ்சோலை மல்குசிற் றம்பலத்தே
எண்டிசை யோரு மேத்த விறைவநீ யாடுமாறே

கோயில்திருநேரிசை-பண்-கொல்லி. 5.

ஞஞ்ஞையுற்றோ னவிநயம்

"ஞஞ்ஞை யுற்றோ னவிநய நாடிற்
பன்மென் றிறங்கிய நாவழி வுடைமையு
நுரைசேர்ந்து கூம்பும் வாயு நோக்கினர்க்
குரைப்பான் போல வுணர்வி லாமையும்
விழிப்போன் போல விழியா திருத்தலும்
விழுத்தக வுடைமையு மொழுக்கி லாமையும்
வயங்கிய திருமுக மழுங்கலும் பிறவு
மேவிய தென்ப விளங்குமொழிப் புலவர்"

(உ - ம்)

திரைவாய்ப் பெருங்கடன் முத்தங் குவிப்பமுகந்து [கொண்டு
நுரைவாய் நுளைச்சிய ரோடிக் கழுமலத் துள்ளழுந்து
விரைவாய் நறுமலர் சூடியவிண்ணவன் றன்னடிக்கே
வரையாப் பரிசிவை நாடொறு நந்தமையாள்வனவே

திருக்கழுமலம் - திருவிருத்தம் - 3.

ஏனைய வந்துழி காண்க.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

நடத்தை [Behaviour]

நோக்கமுடைய செயல்கள் பலபடியாக விளங்குகின்றன. அவற்றிலே, ஒருசில, முன்னோக்கம் உடையனவாகத் திகழ்கின்றன. இன்னது செய்யவேண்டும், அதற்கு இதுவழி, எனப் பல செயல்களிலும் பல வழிகளிலும் தக்கதொன்றை ஆராய்ந்து எண்ணி முடிவுசெய்து, அதன்படி தொழில் புரிகின்றோம் அன்றோ? இவையே உயர் நிலையிலுள்ளனவாம். மற்றுஞ் சிலபோது யாதானும் ஒரு நாட்டத்தால் இழுத்துச் செல்லப்படுகின்றோம். முடிவினை நாம் முற்படத் தெளிவாக அறிவதில்லை. உள்ளத்திலெழுந்தவோர் விரைவு நம்மைப் பிடித்து உந்துகிறது. உள்ளச்சுக்கான் அவ்வழியாகத் திருப்பியமைக்கப்படுகிறது. வேட்டைநாய் வேட்டையாடுவதிலேயே நாட்டமாய்க் காட்டில் ஓடுகிறது. ஆனால் தன் செய்கையின் பயனைத் தெளிவாக முன்னரே உணர்ந்தோ தொழில்புரிகின்றது? இந் நாட்ட நிலையே, இடைநிலையில் உள்ளதாகும். வேறு சில தொழில்களோ, நோக்கமுடைய செயல்களின் நிரையில் கீழ்நிலையில் இருக்கின்றன. இவை விருப்பமெனும் வேட்டமுடைய செயல்கள். களைப்பின்றிச் சிலவற்றைச் செய்ய விரும்புகின்றோம். சில செயல்களைச் செய்ய நம் மனம் ஒருப்படுவதில்லை. இவை நமது உடல் நிலையை (Organic State) பொறுத்தன. [உடல்-உயிரோடு கூடியது; உயிரில்லாதது பிணமாம்]

5-வது பாகத் தொடர்ச்சி.

உடல்நிலையைப் பொறுத்த வேட்டமுடையசெயல்கள் எழும் வகைதான் என்ன?

நாம் உண்ணும் உணவு, உயிர்ச்சாறாகத் தசைநார்களில் பாய்கின்றதன்றோ? அதுவே தசைநார் எரிந்து இயங்குவதற்கு எரிகரும்பாவது. கரியில் நெருப்பின் ஆற்றல் மறைந்தடங்கிக் கிடப்பதுபோல, தசைநாரில் வந்துபாயும் உயிர்ச்சாற்றிலும், தசைநாரை இயக்கி வைக்கும் ஆற்றல் மறைந்தடங்கிக் கிடக்கின்றது. நடுவிட நரம்பமைப்பினின்றும் இயக்கநரம்பானது, கிளர்ச்சியைக் கொண்டுசென்று தசைநாரில் முடிகின்றது எனக் கண்டோம். வெடிமருந்திலே தீயிட்டால் அம்மருந்து வெடிக்கின்றது. அதில் மறைந்தடங்கிக்கிடந்த ஆற்றல் (Energy) வெளியே கிளம்பி அண்டையில் உள்ள பொருள்களைத் தாக்கி அசைக்கின்றது. அஃதே போல இயக்கநரம்பு வழியாக வரும் நரம்புக்கிளர்ச்சி தசைநாரைத் தாக்கியதும் அங்குள்ள உயிர்ப்பொருள் (ஓர் ஆற்றலாக) வெளிப்பட்டு இயக்கத்தை உண்டுபண்ணுகிறது. இத்தசைநார்களில் ஒன்றை மின்னோட்டத்தால் (Electric Current) அடுத்தடுத்துத் தாக்கும்பொழுது என்ன நேரிடுகிறது? தொடக்கத்தில், திமிரினால் சுறுசுறுப்புக் குறைந்திருக்கிறது. சிலமுறை தாக்கியபின் இத்தசைநாரே, சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்குகின்றது. ஆனால், விடாது தாக்கிக்கொண்டே போவோமாயின், சிறிதுபோழ்து தாழ்த்ததும், இயக்கம்குறையத் தொடங்குகின்றது. தசைநார் இயங்கும்போது உயிர்ப்பொருள் எரிக்கப் படுகிறதன்றோ? அவ்வாறு எரியும்போது எரிந்த கரி அங்குக் கிடக்குமன்றோ? அங்குக் கரியாக இருப்பது கரிக்காற்றேயாகும். அதனைக் குருதிவழியாக வெளித்தள்ளுதற்குப் பொழுது வேண்டும். அவ்வாறு பொழுது ஏற்படாதபடி இடையீடில்லாமல் இயக்கினால் கரிக்காற்று அங்கு மிகுதியாய்ச் சேர்ந்துவிடுகிறது. சாம்பல் நிறைந்த நெருப்பு நன்றாக எரியாததுபோலக் கரிக்காற்று மிகுந்திருக்கும் தசைநார் நன்றாக இயங்குவதில்லை. களைப்பு மிகுதியாகின்றது. தூண்டுகோலாகிய (Stimulus) மின்னோட்டம் ஏறவும் குறையவும் செய்யாமல் ஒரே நிலையில் இருக்கத் தசைநாரின் இயக்கம்மட்டும் இவ்வாறு வேற்றுமையுறுவது எதனாலே? உயிருடல் நிலையால் ஆகியதே இவ்வேற்றுமை. முதலில், விருப்புடன் இயங்கத் தகுதிபெற்றதாய் விளங்கிய தசைநார் பின்னர் இயங்கவே மறுக்கின்றது. இக்களைப்பு என்பது அகநிலையன்றோ? [இக்கீழ்நிலையில் எதிரூன்றல் (Reaction) இயற்கை யமைப்பு மாறுதல் (Chemical) வடிவினதாக விளங்குகின்றது] இடைநிலையில் உள்ள நாட்டமுடைய செய்கையோ நரம்புகளாலாகியது. அந்நிலையில் முன்னேற்பாடாக இருக்கின்றோம். பலர் ஓடுவதற்குக் குறித்த இடத்தில் கால்களை ஓடப் புகுநிலையில் பண்ணுறுத்திவைத்து முன்னேற்பாடாக நிற்கின்றனர். பொதுவாளி "ஓடு" என்றதும் ஓடத்தொடங்குவர். தசைநார்களை நரம்புகளே அடக்கியாள்கின்றன. முன்னேற்பாடாய் நிற்கும் அவை, கிளர்ச்சியைத் தசைநாரில் இதற்குள் பாய்ச்சவில்லை. ஆதலினால், பண்ணுறுத்தி நின்றநிலையில் தசைநார்களின் இயக்கம் இல்லை. "ஓடு" என்றதும் கிளர்ச்சி தசைநாரில் பாயும்; தசைநாரும் இயங்குவதற்குமுன் நரம்புக்கிளர்ச்சி நரம்புவழியாகப் பெருக்

கொடுத்துவந்து அணைக்கு எடங்கிக்கிடக்கும் நீர் போலத் தடைபட்டுக் கிடக்கின்றது

முடிவான எதிரூன்றல் (End - reaction) நிகழ்வதற்கு முன்னர், பண்ணுறுத்தும் எதிரூன்றல்கள் (Preparatory reactions) நிகழ்கின்றன. நமது செயலின் நோக்கம் எதுவோ அதுவே முடிவான எதிரூன்றல். அப்பயனை நிறைவேற்றிவைக்க நாம் முன்னேற்பாடாகப் புரியும் தொழில்களை பண்ணுறுத்தும் எதிரூன்றல்களாம். தொலைவிலிருந்து எனது நாயை அழைக்கின்றேன். என் ஒலியைக் கேட்டதும் அந்நாய் ஓடோடியும் வருகின்றது. அந்நாயை ஓடிவரச் செய்தது எது? என்னை அடையவேண்டும் என்ற நோக்கமே என்க. அதனை எழுப்பியது எனது ஒலியாகிய புறத்தூண்டலேயாம். இவ்வாறு எழுந்த தொழிலின் முடிவு என்ன? என்னை அடைதலேயாம். என்னருகே வந்து என்மேல் குதித்து என் கையை நக்குவதே முடிவான எதிரூன்றலாகும். என் ஒலியைக் கேட்டதும் இம்முடிவான எதிரூன்றலைச் செய்யவே நாய் மனம் திரும்புகின்றது. அதனது உள்ளச்சுக்கான் அவ்வழியாகத் திருப்பி விடப்படுகிறது. அவ்வுள்ளமெனும் படகின் பாய்மரம் விரித்துவிடப்படுகிறது. காற்றுத்தான் இனி வேண்டி நிற்கிறது. காற்றடித்ததும் படகும் ஓடும் என்மேல் குதித்தல், என்னும் முடிவான எதிரூன்றலைச் செய்யமுற்படும் அந்நாய் யான் அருகில் இல்லாமையால் உடனே அச்செயலைச் செய்வதற்கில்லை. ஆனால் அந்நோக்கமானது அந்நாயின் மற்றைய செயல்கள் அனைத்தையும் தனக்கேற்பத் திருத்தியமைக்கின்றது. ஓடிவரும் வழியில் உள்ள வேலி கால்வாய் முதலியவற்றைத் தாண்டுகிறது. அவ்வாறு தாண்டுதலே, பண்ணுறுத்தும்எதிரூன்றலாம். என்னை அடைவதற்கு முன்னேற்பாடான எதிரூன்றலன்றோ ஈது. பண்ணுறுத்தும் எதிரூன்றல்களாம் இவை நோக்கத்தால் திருத்தியமைக்கப்பட்டு அதன் வழியே ஓடினும், அங்கங்கே எழுகின்ற தூண்டல்களால் துலங்கியனவேயாம். வழியில் வேலியைக் காண்கின்றது. அத்தூண்டுகோலால் துலங்கி எழுந்து அதனைத் தாண்டுகிறது. சிறிது சென்றவுடன் கால்வாயைக் காண்கிறது. அக் காட்சிவழியாக நேர்ந்த ஊன்றலை எதிரூன்றிக்கடக்கின்றது. பண்ணுறுத்தும் எதிரூன்றல் என்றும், முன்னேற்பாடான எதிரூன்றல் என்றும் நாம் கூறிய தாண்டல் முதலிய செயல்கள் என்மேல் குதிக்கும் நோக்கத்தோடும் ஓடிவருகின்ற நாயின் வழியில் காணக்கிடக்கும் பொருள்களின் தூண்டலால் அவ்வப்போது எழுகின்றவைகளாகும். அங்கங்கே எழுகின்ற ஊன்றல்களுக்கு எதிரூன்றல்களாக அவை விளங்கினும் நோக்கத்திற் குள்ளடங்கியவையே யாம். ஏன்? ஓடிவருகின்ற நாய் எதிரில் கறித்துண்டு இருந்தால் அதைக் கௌவப் போவதில்லை. கறித்துண்டாகிய தூண்டல் (Stimulus) இருந்தும், கௌவுதலாகிய எதிரூன்றல் கால்வாயைத் தாண்டுதல்போல என்னை அடைதற்கு வழியாவதில்லை. எனவே நோக்கமாகிய உள்ளநிலை, அதனை முடித்துவைக்கும் சில செயல்களையே செய்யத் தூண்டுகிறது. அந்நோக்கத்திற்கு இடையூறான செயல்களைத் தடுக்கின்றது. மோப்பம் பிடிக்கும் வேட்டைநாய் எல்லாப் பொருளையும் மோப்பம் பிடிக்கும். ஆனால் அதனை ஒரு குறித்த முயலின் பின்னாக ஏவிவிட்டால் அஃதொன்றினையே மோப்பம்பிடித்தோடுகின்றது. அம்முயலைப் பிடிக்கின்ற வரையில் அமைதியும் ஆறுதலும் இன்றி அலைந்து திரிகின்றது. மூக்கினைக் கவரும் பல இனிய பொருள்களின் நாற்றம் வீசியபோதும் அவற்றைப் பொருட்படுத்தாது தன் வேட்டையில் நாட்டமாக ஓடுகின்றது. எனவே உள்ள நிலை சிலசெயல்களைத் தடுக்கின்றது! சில செயல்களின் வழியாக உந்துகிறது.

பசி என்பது ஒரு உடல்நிலை இதனை நரம்புகள் வழியாக உணர்ந்ததும், அவற்றின் வழியாக நரம்புநிலைகளில் ஒரு பொருத்தம் உண்டாகிறது. "உண்ணுதல்" என்ற முடிவான எதிரூன்றலை நோக்கி உள்ளச்சுக்கான் திரும்புகிறது. பசியா இம்முடிவான எதிரூன்றலை உண்டாக்குகிறது? அப்படியானால், பசி எடுத்தவன் உணவு இல்லாதபோதும் பிசைதல், மெல்லல், விழுங்கல் முதலிய தொழில்களைப் புரிதல்வேண்டும். ஆனால் உணவு எதிரில் இல்லாதபோது இத்தொழில்களை எவனும் செய்வதில்லை. உணவு எதிரில் வருவதே ஊன்றலாம். பிசைதல், மெல்லுதல்,விழுங்குதல் முதலியன அதற்கெதிரூன்றல்களாம், என்பர். ஈதும் உண்மையன்று. பசியில்லாதபோது உணவை வாயிலிட்டால் அதை வெளியே உமிழ்கின்றோம் அன்றோ? எனவே பசியும் எடுத்தல் வேண்டும்; உணவும் எதிர் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் உண்ணுந்தொழில் தொடங்குகிறது. பசியானது உண்ணுந் தொழிலை உண்டாக்காவிட்டாலும் இயக்கத்தை உண்டு பண்ணுகிறது. அதனால் உணவைத் தேடும் தொழில்கள் நடக்கின்றன. அவையே முன்னேற்பாடான செய்கைகள். பண்ணுறுத்தும் எதிரூன்றல்கள் முடிவு வடிவான எதிரூன்றல்களுக்குத் தூண்டுகோலாய் விளங்குகின்றன. பசி எடுத்தபோது, உணவை உண்ணுந்தொழில் புரியத்தக்க நிலையில் இருக்கின்றோம். ஆனால் உணவு இல்லாதபோது அதனை அடைதற்கான தொழில்களைச் செய்யத்தக்க நிலையில் இருக்கின்றோம். இவ்வாறுதான் நோக்கமுடைய செயல்கள் அனைத்திலும் என்க.

இது நரம்புகளிடையே எவ்வாறு நிகழ்கின்றது. நரம்புக் கிளர்ச்சி தடைபட்டுத் தூண்டுகோல் கண்டதும் தசைநாரில் பாய்வதை முன்னரே கண்டோம். நமது நரம்புத்தொடர்கள், மேனிலையும் கீழ்நிலையும் இடைநிலையும் ஆக இருப்பதனையும் கண்டோம். மேனிலையிலுள்ள இயக்க நரம்பமைப்பு நமது நோக்கத்தால் கிளர்கின்றது. அது கீழ்நிலை நரம்பமைப்பின் வழியாகவே செயல்புரிதல் கூடும். ஆனால் கீழ்நிலை நரம்பமைப்போ தக்கபடி தூண்டப்பட்டாலன்றித் துலங்குவதில்லை. பசி எடுத்தபோது மேனிலை நரம்பமைப்பே கிளர்ந்தெழுகின்றது. அதனுடைய நரம்புகளின் வழியாகக் கிளர்ச்சி கீழ்ஓடிக் கீழ் நரம்பமைப்புவரை வருகின்றது. மெல்லுந் தொழில் கீழ்நிலையிலுள்ள இயக்கநரம்பமைப்பைப் பொறுத்தது. அதுவோ, உணவினைக் கண்டால்தான் இயங்கும். ஆகவே மேலிருந்து வந்த கிளர்ச்சி அங்கே அணையிடப்பட்டுத் தடைபட்டுக் கிடக்கின்றது. இவ்வாறு நரம்புக் கால்வாயில் தடைபட்டபோது, மேனிலையிலுள்ள நரம்பமைப்பு, கிளைநரம்புக் கால்வாய்கள் வழியாகத் தன் கிளர்ச்சியை மற்றையநரம்பமைப்புகளில் பாய்ச்சுகின்றது. அதனால் உணவுதேடுதல் முதலிய முன்னேற்பாடு வடிவமாகிய பண்ணுறுத்தும் எதிரூன்றல்கள் நிகழ்கின்றன. பின் உணவு வந்ததும் தடைப்பட்ட கிளர்ச்சி வெளிப்படுகிறது; உண்ணத் தொடங்குகின்றோம்.

நம்மாழ்வார் வைபவம்.

[12-வது பக்கத் தொடர்ச்சி]

திருவாய் மொழி

யோகம்—சுத்தாத்ம தர்சனம்

Self-realisation—Cosmic Consciousness.

இம் மஹாநுபாவன்பகவத்கீதையை ஒட்டிஉரைத்த தருமங்களை முன்வியாஸத்தி னிறுதியில் வரைந்தோம். அந்நூலில் கூறியபடி பக்தர்கள் நான்குவகையினர். (7-ம் அத்தியாயம் 16-வது சுலோகம் காண்க.) அதில் இடுக்கண்வாய் அகப்பட்டவன் ஒன்று. கேட்டில் இழந்த ஐசுவரியத்தைத் திரும்பி யாசிப்பவன், அல்லது தாரித்திரியத்திலிருந்து விடுபட்டு ஐசுவரியமடையவேண்டுமென்று இச்சிக்கிறவன், இரண்டு. தன் ஆத்மரூபத்தைப் பிருகிருதியினின்றுவிடுபட்டுக் காணவேணுமென்ற ஆசைப்படுகிறவன் மூன்று பகவானுடைய ச்வரூபம் தன் ஆத்மச்வரூபத்திற்கு இன்றியமையாத நற்றுணையென்று ஆராய்வது அறிந்து, அந்தப் பரமாத்மாவை அறியத் தவம்செய்யும் ஞானி நான்காவது. இந் நால்வகையாரும் தாம்தாம் விரும்பும் பலனை அடைவதற்காகப் பகவானை வழிபட்டுப் பக்திசெய்கிறார்கள். பகவான், இவர்களில் ஒன்றிரண்டு திறத்தார்கள் தங்கள் அற்ப இஷ்டபூர்த்திக்காகவாகிலும் தன்னிடம் ஒட்டி வணங்குகிறார்களே; இதுவும் இல்லாமற்போனால் இவர்கள் இழந்து போவார்களே என்று கருணை மிகுதியால் இவர்களைப் பக்தர்களாக ஏற்றுக்கொள்கிறார். இவர்கள் அற்பநசையின் தூண்டுதலாலே நம்மை ஆசிரியத்தாராகிலும் பலன் கிடைக்கவேண்டி உண்மையில் நம்மை அடுத்துளாரே. இவருக்கு இவ்வளவாவது ஆர்வ முள்ளதே என்று அவன் இரங்குகிறான். இம்மூன்றும்வகுப்புக்காரரை ஆத்மாவலோகனயோகி என்றும், கீதையில் அக்ஷரயோகி என்றும், சுருக்கமாய் யோகி என்றும், கேவலன் என்றும் அதாவது, தன்னுள் நின்றஜீவாத்மாவின் சுயரூபத்தைமாத்திரமே அறிய எத்தனிக்கிறவன் என்றும் வ்யவஹாரத்தில் கூறுவது வழக்கம். இவர்களைப்பற்றிப் பலவிடங்களில், அறிவீனர்களென்றும், புத்திநுட்பம் போறுதவர்களென்றும் தாங்கள் இடும் கைமுதலுக்குத் தகுந்தலாபத்தை வேண்டாதவரென்றும், மூர்க்கமான துணிச்சலுள்ள பிடிவாதக்காரரென்றும், சதுரரல்லர் என்றும், இகழ்ந்து கூறியுள்ளார். சென்ற வியாஸத்தில் முதல்திருவாய்மொழி 7-வது தசகத்தின்முதல்பாட்டில்இவரைப்பற்றி நிந்தாஸ்துதியாய்ப் பரிகசிக்கின்றனரென்றுஎழுதியுளோம். அதை அவ்விடத்தில் பார்க்க இது இயலாதவருக்கு அவ்விடத்தில் நாம் எழுதியதை ஒருவாறு சுருக்கிக் கூறுவோம் இத்தபசிகளின் கருத்து, பிறவியினின்றும் விடுபடவேணுமென் றவர்செய்யும் தபசு ஐம்புலன்களை அடக்கி ஞானம் பெறுவது. இத்தபசின் இலக்குத் தத்தம் ஆத்மசுவரூபத்தைப் பிருகுருதியினின்றும் விடுபட்டுக் காண்கை. இத்தபசு தங்களுக்குக் கைகூடிவரப் பகவானை ஓய்விலாமல் சிந்தையில் அமைத்துப் பலன் வேண்டுகை. இவ் வல்பபலத்துக்குக்கூடப் பகவானை இவர் உபாஸனை செய்கிறார்களே, என்ன தார்மிஷ்டர். என்ன நன்னெறி தெரிந்தவர், என்று கொண்டாடுகிறார். இவர் இயற்றும் தபசுக்கே மோக்ஷமாகிய பெரிய புருஷார்த்தத்தைச் சாதிக்க வல்லவராயிருந்தும் அதை ஒழித்து அல்ப பிரயோஜனத்தை நாடுகிறார்களே என்ற நிந்தாஸ்துதி இவர் கருத்தில் பொதிந்து நிற்கின்றது. இவ்விதத் தபசு, ஆற்றின் கரையை மோதிப்போகிற வெள்ளம் கரைகளுக்கு எப்படி அபாயஹேதுவோ அதுபோல், எவ்வளவு விசாலமாக மனதைத்தேற்றித் தவம்புரிந்தாலும், ஒருகால் இந்தரியங்களின் வாயில் அகப்பட்டுத் தாம் ஏறிய இருநிலைமாடம் கால்சாய்ந்து, பாசத்தால் சிறுக நினைவதான இடர்பாட்டுக் குட்படுத்தித் தாம் பூண்ட தவத்தை உடைக்குமென்றும், அதினால் ஆழங்காலிட்டுக் கோரியபலத்தை இழப்பாரென்றும் கூறுகிறார். மேலும் தபசு நிறைவேறப் பகவானை, தேஹம் விடும்போது ஆத்மசுவரூபத்தைத் தனக்குத் தாவேணுமென்ற மனத்துணிவும் பிரார்த்தனையும் ஆவசியகமென்று சாஸ்திரம் ஓதுகிறது. இதுவும் வாய்த்தல் அரிது, என்றும் கூறி; இந்த முயற்சிக்கே இத்தபசிகள் வீடு, அதாவது கடைசி புருஷார்த்தமான மோக்ஷத்தை, ஆபேக்ஷிக்கலாமேயென்று புத்திமதி அளிக்கிறார். இக்கருத்துள்ள பாசுரம் 4-1-10—

குறுகமிக வுணர்வத்தோடு நோக்கி எல்லாம்விட்ட
இறுகலிறப்பென்னும் ஞானிக்குமப்பயனில்லையேல்
சிறுக நினைவதோர் பாசமுண்டாம் பின்னும்வீடில்லை
மறுகலி லீசனைப்பற்றி விடாவிடில் வீடும் அஃதே.

பகவத்கீதையில் இது, சாங்கியமென்னும் பொதுப் பெயராலும், "யோகம்" என்றும், கூறப்பட்டு ஒன்று முதல் ஆறு அத்தியாயங்களில் ஆங்காங்குச் செப்பப் பட்டிருக்கின்றது. இரண்டாவது அத்தியாயத்திலும் முக்கியமாய், 6-வது அத்தியாயத்தி னிறுதியிலும், இந்தயோகத்தை நிறைவேற்றித்தர (அதாவது நடுவில் சிதைந்து உருவழியாமல் நிற்க) பகவானைக் குறித்து ஒரு தபசுசெய்து "நான் இந்த யோகத்தைப் பூர்ணமாக அநுஷ்டிக்க வல்லேனல்லேன். நீ அதைத் தலைக்கட்டித் தாவேணும் என்று ஒரு சரணாகதி செய்ய வேண்டுமென்றும் பகவத்கீதை கற்பிக்கின்றது. இந்த யோகம் பலதெசையில் ஸ்திரமாய்நின்று இன்பமளிக்குமா என்றும், அல்லது பலநாள் நின்றாலும் அஸ்திரத்தத்துவம் அதை ஒருகாலத்தில் பிடித்து மேல்கண்ட இன்பம்நசித்துப் பிறவித்துயரில் மூட்டுமோ என்றும், அல்லது நிச்சயமாய் நிரந்தரமாக நிற்குமோ அல்லது சலித்துவிடுமோவென்றுங் கீதையைக்கொண்டு சொல்ல சாத்தியமில்லை. ஆறும் திருவாய்மொழி 9-ம் பதிகம் 10-வது செய்யுளில், இவர்உரைப்பதைக்கொண்டு இரண்டில் ஒன்று இவர் துணிவு எதுதானென்று சொல்ல இயலாது. "சிறியதாகாமலும் பெரியதாகாமலும் ஒரே அளவோடு விளங்கும் இவ்வின்பம், முடிவில்லாமல் எத்தனை யூழிக்காலம் நடவாநின்றாலும் இது, சிறுகாலம் பகவத் தாஸியமாகிற அவனிடத்தில் பிரியபக்தியுடன் நடக்கும் யோகத்துக்கு ஒப்பாகாது. ஐயோ! இதை தெளியக் கூறவேண்டி யிருப்பதே" என்று இன்னதாகிறார். இதற்குச் செய்யுள்

'குறுகா நீளா இறுதிகூடா எனையூழி
சிறுகா பெருகா அளவிலின்பம் சேர்ந்தாலும்
மறுகாலின்றி மாயோன் உனக்கே யாளாகும்
சிறுகாலத்தை யுறுமோ அந்தோ தெரியிலே.

முதல்திருவாய்மொழி 2-ம் பத்தில் 5-ம் பாசுரத்தில் இந்த அல்பசுகமும் அற்பஇன்பமும் முடிவுற யோகத்தில் இழியாமலிருக்கப் புத்திமதி கூறுகிறார். பாசுரம்

" அற்றது பற்றெனில்
உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில்
அற்றிறை பற்றே "

[இதன் பொருள்:-ஆத்ம ச்வரூபந்தவிர இதரவிஷயங்களில் "ஐம்புலன்கள் இசைவிக்கும் பாசத்திலிருந்து மோக்ஷம்பெறத் தவம்முயல்கிறவர்கள் அதினின்றும் விடுபட்டால் ஜீவாத்மதர்சன மடைவார்கள். அது செற்றுமன்னுறில், அதாவது இந்த ஜீவாத்ம தர்சனத்தின் ஆனந்தத்தில் அகப்படாமல் "மன்னுறில்", அதாவது சிறிய பக்தியோகமாகிற சாச்வத பதவியில் நிலைபெறவேணுமானால் இந்தஆத்ம தர்சனமாகிய சிற்றின்பத்தில் நசையற்றுஈசனிடத்தில் மனம்வைத்துஅவனையடையத் தவம் இயற்றுங்கோள்] இங்கே இவர் இவ்வாத்மதர்சனம் அஸ்திரமென்று ஒருவாறு சூசிப்பிக்கிறார். இவ்விடங்களில் இம்மஹான் அவரவர் பிரத்தியேகமான சுபரூபத்தைக் கூறியுள்ளாராயினும் எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவான பிருகிருதி விடப்பட்ட சுத்தாத்ம சுபரூபமே இவர்கருத்து. இதுவேதான் யோகிக்கும் நோக்கு ஜீவாத்மாக்கள் பிருதக்பிருதக், அதாவது வேறுவேறு யிருந்தாலும் பிருகிருதியிலிருந்தும் விடப்பட்ட ஆத்மசுவரூபம் எல்லாருக்கும் ஜாதி சுபாவம் ஒன்றுபோலேதான் உள்ளது. ஒருவண்டிநெல்லை நோட்டக்காரன்பரிக்ஷை பார்த்தானானால், நெல் நல்லது தீது என்று உரைக்கும்போது நாலைந்து நெல்லைப் பரிசோதித்து ஜாதி சுவரூபத்தைத் தீர்மானிக்கிறான். பக்தியோக நிஷ்டனுக்கு அழகான ஆத்மதர்சனம் வேண்டாமோ எனில், அவனுக்கு அபேக்ஷிதமில்லை யானாலும் அந்தராயமாய், அதாவதுஇடையில், அது ஸம்பவிக்கக்கூடும். ஆனால் இவனுக்கு இதில் இலக்கு இல்லாமைபற்றி அதில் அவன் அகப்பட மாட்டான். மேல் ஒண்பொருளான பகவானை அடையவேண்டியவனுக்கு நடுவில் தோன்றும் பலன் அநபேக்ஷிதம். மேலும்,ஞானியான பக்தன் அந்த ஆத்மசுவரூபத்தை ஊன்றி நோக்கி அது பகவானுக்கு உரித்தென்றும், பிரிக்கதான் வேறுபடாத பொருளென்றும், ஜீவாத்மாவின் தேஹம் அந்தந்த ஜீவன் இஷ்டபிராப்திக்கு வேலைசெய்வதுபோல் பரமாத்மாவின் ஏவலுக்கு உட்பட்டு அவனுக்கே உபயோகார்த்தமென்றும் உள்ள தத்துவத்தை நன்கு அறிகிறான். ஆகையால் பக்தியோக நிஷ்டன் நாட்டம் முழுவதும் பரமாத்மாவி னிடத்திலேயே ஊன்றி அமைந்து நிற்கும் கேவலனுக்கோ அந்நாட்டம் ஆத்மதர்சனத்தை அடைந்தவுட னதுவே பூர்த்தியென்று ரசம்பற்றி மேல்பாயாது அதனிடத்தே கிடக்கும் இதைத்தான் கீதை 6-வது அத்தியாயத்தில் 22-வது சுலோகத்தில் பகவான் பணித்துள்ளார். ஆத்மாவைக் காண்கைக்கு ஏற்பட்ட யோகத்தில் அமைந்துள்ளார் அது கைகூடிற்றாகில் அதிலேயே அமர்ந்து வேறொரு ராஹ மோஹங்களால் கமலங்காட்டார் என்று மேல்குறித்த சுலோகம் கூறுகின்றது. இவ்வாழ்வார் இந்த யோகத்தை அலக்ஷியமாய் நிந்திப்பவர். இதில் யாதொரு யத்தனமும் தாம் செய்திராரென்றுகூற ஆவசியகமில்லை. ஆனாலும் இவருக்கு இந்தச் சுத்தாத்மதர்சனம் எப்போதாவது சம்பவித்ததா, எப்படிச்சம்பவித்தது என்று விமர்சிக்க உளது. பகவான் இவர் வேண்ட ஆதரத்துடன் தம் திவ்விய ஸௌந்தரியத்தோடு இவருள் கலந்தான். இச்செய்தியை 8-ம் திருவாய்மொழி 7-ம் பதிகத்தில் நமக்கு உரைக்கின்றார். உரைக்கும்போதும், இவ்வளவு மாட்சிமையுள்ளவன் "சிறியேன் சிந்தையுள்" அடங்கியுளானே, என்று 8-ம் செய்யுளில் எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்தார். இவர் மனதில் நடையாடுகிற இகழ்ச்சியாய்த் தம்மைத் தாம் நினைத்தும் நினைவு நம்மோடு சம்பூர்ணமான கலவிக்கு இடர்ப்பாடாகும் என்று அந்தக்கருணாநிதிஇவருக்கு ஆத்மசுவரூபம் தமக்கு அப்பிரதக் சித்தமென்றும் ஆள்பட்டு ஏவல்செய்ய உரித்தோனென்றும் அவன் குணத்தை இவர் சிந்தையில் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் கருதித் தத்துவத்தை முழுவதும் உணரும்படி காட்டிக்கொடுத்தான். அப்போது சுத்தாத்ம ச்வரூபத்தை நெருங்கிய மங்களத்துவமுள்ளதாக உணர்ந்து அவனுக்குச் சேஷதைச் சச்சவாகமென்று தேறினார் இதுமேல்படி 4-ம் செய்யுளில் அவனுக்குஜீவாத்மா நிரதசிய போக்கியவஸ்து வென்று "தேனும் கன்னலும் அமுதுமாக்கித் தித்தித்து யானும் தானாய் ஒழிந்தானே" என்று பாடியுள்ளார். யானும் தானாய் ஒழிந்தானே என்று சொல்லக்கூடுமோ,ஜீவன் வேறில்லையோ, என்றால், ரத்னங்களால் அமைந்த ஆபரணம் அவைகளைக்கூட்டி நெருக்கித்தரும்தங்கத்தோடுஒரே சோபையாய்க் காண்பதில் தங்கம் வேறுஇருப்புள்ளதென்று அறியமுடியாமை போலும். அலையில்லாத சமயம் பெரிய ஏரியின் அமிர்தம்போன்ற நல்ல வெள்ளத்தில் ஒருபொட்டுத் தேன் விழுந்தால் ரசஉணர்ச்சியில் எல்லாம் ஒன்றுபடுவதுபோல் காணும் என்கிற நியாயங்களால் மேல்கண்ட ஐக்கியபாவத்தைப் பெரியோர்கள் நிரூபித்துள்ளார். ஐந்தாவது பாசுரத்தில் ஆத்மசுவரூபத்தின் தத்துவத்தை எடுத்துரைக்கிறார். நாம் முன் ஒரு வியாஸத்தில், இம்மஹானுபாவன் தத்துவ உணர்ச்சியுள் தற்கால தத்துவதர்சிகள் புதிதாய்த் தாங்கள் கண்டெடுத்ததாகக் காட்டும் தத்துவங்கள் இவர் நாலாயிரம் வருஷத்திற்கு முன்பேயே விமர்சித்துச்சித்தாந்தம்கூறியுளாரென்று சொன்னோம். இம்மஹான் கூறியுள்ளதை மேல்கண்ட செய்யுள் விளக்கத்தில் உணர்வோம். அதற்கு எதிர் தற்கால மார்க்கதரிசிகள் (Philosophers) கூறுவதை எடுத்துரைப்போம். படிப்பவர் இவ்விரண்டும் ஒன்றுபோலே யிருப்பதை விஸ்மயித்துக் கண்டுகொள்வார்கள்.

அடுத்த வியாஸத்தில் சில ஆங்கிலக் குறிப்புகள் வரைய யிருக்கின்றோம். அவை, Dr. Richard Maurice Bucke என்பவர் இயற்றிய Cosmic consciousness—A study in the evolution of the Human mind" என்ற புஸ்தகத்திலிருந்து எடுத்துள்ளன. இப்புத்தகத்தைப் பிரசுரிக்கும் பாத்தியதை யுள்ளவரைத்தேடி அவர் விடைபெற்று மதுராஸ் ஹைகோர்டு ஜட்ஜி ம-ள-ள-ஸ்ரீ லர். வி

ராமேசம் பந்துலு அப்புத்தகத்தின் சில அம்சங்களை மதுராவில் அச்சிட்டுள்ளார். அங்ஙனம் அச்சிட்ட புத்தகத்தின் ஏடுகளையே இவ்விடத்தில் காட்டியுள்ளோம். இந்தக் கிரந்தக்காரரால் ஆத்மதர்சனத்தை அனுபவித்தவர்கள், மனது ஞானம் பாஷை இவைகளில் தேர்ச்சி அடைந்தபின்னர்ப் பலர் இருந்திருக்கக்கூடுமென்றும் 50, 60 பேர்களை எடுத்துரைத்துத் தமக்குத் தெரிந்தவரில் 32-பேர்கள் இத்தர்சனத்தை நிச்சயமாய் அடைந்தவரென்றும் அட்டவணை இட்டிருக்கிறார்.

தமிழ்ப் பாடம் 104.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

கிருஷ்ணன் தூதுச் சருக்கரும்.

[7-வது பக்கத் தொடர்ச்சி]

சந்தனுவுக்கும் கங்கைக்கும் பிறந்த பீஷ்மனுக்கும், சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் பிறந்த விசித்திரவீரியனுக்கும், சத்தியவதிக்கும் பராசரருக்கும் பிறந்த வேதவியாசருக்கும் உள்ள உறவு அண்ணன் தம்பிமுறையி லடங்குமாயினும், பீஷ்மனுக்கும் விசித்திரவீரியனுக்கும் தந்தை ஒருவர் தாய் வேறுவேறு; விசித்திரவீரியனுக்கும் வேதவியாசருக்கும் தாய் ஒருத்தி, தந்தை வேறுவேறு ; பீஷ்மனுக்கும் வேதவியாசருக்கும் தந்தையும் வேறு, தாயும் வேறு.

விசித்திரவீரியன் மகவின்றி யிறந்ததால் மதிகுல மரபு தொடர்பற்று மறையும்நிலையில் இருந்ததுகண்டு சத்தியவதி தன் மருகியர் அம்பிகை அம்பாலிகை என்னுமவ்விருவரோடும் மிகவும் துன்புற்றனள். அக்காலத்தில், சாத்திரப்படி நியோகம் என்னுமோர் விதியிருந்தது. புத்திரனில்லாமல் ஒருவன் இறப்பானாயின், அவன் சந்ததி யற்றுப்போகாவண்ணம், அவனது மனைவி தன் தேவரனுடன் கூடி (தேவரன் - கணவனுடன் பிறந்தவன்) ஒரு பிள்ளையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பது அந்த நியோகம் என்னும் விதியின் கொள்கையாம். இந்த நியோக விதிதான் இப்பொழுது புத்திரனைச் சுவீகாரம் எடுத்துக்கொள்கின்ற பழக்கமாகமாறி வழங்குகின்றது. இதன்படி, 'நின் கொழுந்தியருக்குப் புத்திராருளுவாய்' எனச் சத்தியவதி பீஷ்மனை வேண்ட, அவன் இதனால் தான் கொண்ட விரதம் வழுவுமென்று மறுத்து, வேதவியாசரைக்கொண்டு இக்கருமத்தை முடித்துக்கொள்ளலாமென நினைப்பூட்டினான். சத்தியவதி வேண்டிக்கொண்டபடியே வேதவியாசரும் வந்து அம்பிகையுடன் கூடினார். அவளோ, தவத்தால் இளைத்துக்கிடந்த உடலும் பின்னிச்சுருண்ட சடையையும் உடைய இம்முனிவன் வந்தபோது அவனைக் காணவுங் கூசித் தன்கண்களைத் திறக்காமலேஇருந்துவிட்டாளாகையால் அவள் வயிற்றில் திருதராட்டிரன் குருடனாய்ப்பிறக்கலானான். எனவே, சத்தியவதி வேண்டியபடி வியாசர் அம்பாலிகையுடன்கூட,அவள் இம்முனிவனைக்கண்டு அஞ்சி மெய்யெல்லாம் விளர்த்தாளாதலால், அவளுக்குப் பிறந்த பிள்ளையும் பாண்டு ஆயிற்று. இருபிள்ளைகளும் இவ்வாறு ஊனமடையவே, சத்தியவதி, அம்பிகையை மறுபடியும் வியாசருடன் கூடி நல்லதோர் மகவைப் பெற்றுக்கொள்ளக் கட்டளையிட்டாள். அம்பிகையோ முனிவனை அணைய மனமிசையாது, தன் தாசி ஒருத்திக்குத் தன்போன்ற வேடம்புனைந்து வியாசரிடம் அனுப்பினள். அத்தாசியோ, இத்தகையதோர் மாமுனிவரனது சேர்க்கையைப்பெறும் தன் பாக்கியத்தை மிகமகிழ்ந்து மனமொவ்விக் கூடினளாதலின், தருமமும் ஆற்றலும் மிகுந்த உத்தமனான விதுரன் அவள்வயின் பிறந்தான். பிறவி இவ்வாறெலாம் வேறுபட்டாலும் திருதராட்டிரன் பாண்டு விதுரன் ஆகிய மூவரும் சகோதரரென்னும் முறையுடையவர். பீஷ்மன் இவர்களுக்குப் பெரிய தந்தை.

இம்மூவருக்கும் தக்கவயது வந்தபின், திருதராட்டிரனை அரசனாக்கி, பாண்டுவைச் சேனாபதியாகவும் விதுரனை மந்திரியாகவும் அமைத்தனன்பீஷ்மன். காந்தரதேசத்தரசனது மகள் காந்தாரியைத் திருதராட்டிரன் மணந்து, துரியோதனன் துச்சாதனன் முதலிய நூறு பிள்ளைகளையும், துச்சளையென்னும் ஒரு பெண்ணையும் பெற்றான். பாண்டுவின் மனைவியர்,குந்தி மைத்திரி என்பவர் இருவர்.

பாண்டுவின் மூத்தமனைவி குந்திபோஜனாட்டரசனுடைய புத்திரியாதலால் அவளுக்குக் குந்தி என்ற பெயர் வந்தது. இவளது இயற்பெயர் பிரதை. இவளது இளமைநாளில் தந்தையின் கட்டளைப்படி மிகவுங் கோபமுடைய துருவாசமுனிவனை ஒருவருடகாலம் அவன்மனம் சிறிதுங் கோணமல் வழிபட்டனள். அதனால் மிகமகிழ்ந்தஅம்முனிவன்,"பெண்ணே, நீ தேவரில் யாரைக் கருதி வரஅழைத்தாலும் அவரவர் அக்கணத்தில் வந்து உன்னோடு சேர்வார்" எனவொரு மந்திரம் அவளுக்குக் கற்பித்துவிட்டுப் போயினார். போயபின், கன்னிப்பருவத்திருந்த பிரதையென்பாள், இம்மந்திரத்தைச் சோதிக்கவேண்டுமென்று பிள்ளைமதியால் உச்சரிக்கச் சூரியன் வந்து இவளோடு புணர நேர்ந்தது. கர்னனைப் பெற்றாளாயினும் மீண்டுங் கன்னியே ஆயினாள். கவச குண்டலங்களுடன் பிறந்த மகவை ஒருவருமறியாமல் ஒரு பெட்டியில் வைத்துக் கங்கைநதியில் போக்கினள். தேர்ப்பாகனொருவன் இப்பெட்டியைக் கண்டெடுத்து அதனுள்ளிருந்த கர்னனை வளர்த்துவரத் துரியோதனன், அர்ச்சுனனை வெல்லத்தகுந்த ஆற்றலுடையவன் இவனே யென்று அவனிடம் மிகுந்த நட்புக்கொண்டு, அவனை அங்கதேசத்திற்கு அரசனும் ஆக்கினான். இஃதிவ்வாறாக,

பாண்டு, குந்தியை மணந்து வாழும்நாளில் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றபோது அங்கு, மான்உரு எடுத்துத்திரிந்திருந்த முனிபத்தினி ஒருத்தியை மானே என எண்ணிக்கொன்றுவிட, அம்முனிவர், "நீ உன் மனைவியுடன் சேர்ந்தால், அப்பொழுதே இறப்பாயாக" எனச் சபித்துவிட்டார். ஆதலின் பாண்டுவிற்கு மக்கள் பிறப்பது இயலாததாயிற்று. எனவே, துருவாசமுனிவன் கற்பித்த மந்திரத்தால் தேவர்களின்சேர்க்கையாலாவதுபுத்திரர்

விரவிய நண்பி ஞலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற் கேற்ப வன்பினுன் மகன்மைக்
[கொண்டார்.

என்னும் விஷயம் நமக்கு யாதொரு ஆச்சரியத்தையும் விளைவிக்கவில்லை. இவர் "அரசிளங்குமரற் கேற்ப வன்பினுன் மகன்மைக் கொண்டார்" என்பதனுல் இப்பெருமைசால் அரசற்கு நம்பியாரூரர் காதற் பிள்ளையாய் வளர்ந்தும், இவர் குலமுறைமை வழுவா து உபநயன சடங்குகளும், வேதசாஸ்திர அத்தியயனமும் செய்யப்பெற்றனர் என்றும். தடுத்தாட்கொண்ட விவாகமும்

தந்தையார் சடையனுர்தந் தனித்திரு மகற்குச் சைவ
வந்தணர் குலதுட் டங்க ளரும்பெரு மரபுக் கேற்ப
வந்தவோர் சிறப்பிற் புத்தூர்ச் சடங்கவி மறைபோன்
செந்திரு வனைய கன்னி, [றன்பாற்

யாகையால், நரசிங்கமுனை யரையர், அவர் காலத்தில் எல்லா அறிஞர்களையும் கண்டறிந்து ஆதரிக்கும் வழக்கம்போல், நம்பியாரூரரையும் ஆதரித்தார் என்பதே சேக்கிழார் மொழிகள் குறிப்பிடுகின்றன. அரசன், இவரை ஸ்வீகார புத்திரனுக வளர்த்தாரென்றும் கூறலாகாது. பேட்ரன் (Patron) என்று ஆங்கிலத்தில் கூறப்படும் உபகாரியாய் இவருக்குக் கல்வி முதலியவற்றில் அளவற்ற திரவியசகாயம்செய்திருக்கலாம். குதிரையேற்றம் * கற்றுக்கொடுத்திருக்கலாம். ஏற்பாடுசெய்த விவாகத்திற்கும் பொருளுதவி செய்திருக்கலாம். ‡ ஆயினும், மாயவிப்பிரர் வந்து தமது அடிமை வழக்கு † தொடுத்த காலையில், நரசிங்கமுனையரையர் அதில் கட்சியெடுத்துப் பிரவேசிக்கவில்லை; எனவே, அரசர் இவ்விவாகத்தை முன்னின்று நடத்திவைக்க முயற்சி செய்ததாய்க் காணப்படவில்லை. பலபேருக்கு உதவிசெய்யும் வள்ளல் இவருக்கும் நன்கொடை சாலவும் செய்தனன் போலும்.

நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரையன்
ஆதரித்தீசனுக் காட்செயு மூரணிநாவலூரென்

* "காற்றனைய கடும்பரிமா யேறுவதும் வேண்டும்,
கடனுகைக் காரோண மேவியிருந்தீரே!"

என்னும் சுந்தரர் மொழியை நோக்குமிடத்து, இவர் குதிரை யேற்றத்தில் வல்லவரென்று தெரிகிறது. யானை யேற்றமும் இவர் கற்றதால் இவர் வெள்ளையானை யேறி திருவஞ்சைக் களத்தினின்று திருக்கயிலாயம் சென்றார்:—

மண்ணுலகிற் பிறந்துநும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதறொண்ட னேனின்று கண்டொழிந்
[தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளையானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தா னுடைத்தான் மலையுத்தமனே!

‡ உற்றதோர் மகிழ்ச்சியெய்தி மணவினை யுவந்து சாத்திக்
கொற்றவர் திருவுக்கேற்பக் குறித்துநா ளோலைவிட்டார்
தடுத்தாட்கொண்ட புராணம்—9, வரி 3-4.

† [சுந்தரர் கூற்று :—
நம்பனே யன்று வெண்ணெய் நல்லூரி
லுயினேன் றன்னையாட்கொண்ட
சம்புவே யும்பரார் தொழுதேத்துந்
தடங்கடனஞ் சுண்டகண்டா
செம்பொன்மாளிகைசூழ் திருமுல்லை
வாயிற்றேடி யான்றிரிதர்வேன்கண்ட
பைம்பொனே யடியேன் படுதுயர்களையாய்
பாசுபதா பரஞ்சுடரே !]

றோத நற்றக்கவன் றொண்டனூ ரூரனுரைத்தமிழ்
காதலித்துங் கற்றுங்கேட்பவர்தம் வினைக்கட்டறுமே.

என்னும் வன்றொண்டர் தேவாரத்தால் இவ்வரசர் சிவபெருமான் தடுத்தாட்கொண்ட விஷயத்தில் யாதொரு தடையும்செய்யாததால், ஈசனுக்கு ஆட்செய்தாரென்றும், நாம் அறிகின்றோம். இந்நரசிங்கவர்மன், பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவனென்றும், அநுமானிக்கத்தக்க சொற்றொடர்களும் சுந்தரர் தேவாரத்திற் காணலாம்.

கூடலர் மன்னன் குலநாவ லூர்க்கோனலத்தமிழைப்
பாடவல்ல பரமன்னடியார்க்கடிமை வழுவா
நாடவல்ல தொண்டனூரனூட் படிமாறுசொல்லிப்
பாடவல்லார் பரலோகத்திருப்பது பண்டமன்றே ?

என்னும் பாசுரத்தில் 'கூடலர் மன்னன் குல நாவலூர்க்கோனலத்தமிழ்' என்பது நரசிங்க முனையரையன் தனக்குக் கற்பித்த தமிழைக் குறிக்கும். இத்தகைய அரசரேறும் அவர் பிராமணக்குடிகளான சடையனுரும் இசைஞானியும், இவர் புதல்வனும் நாம் அறுபத்துமூவரில் முதல் * வகுப்பாய் எடுக்க வேண்டியவர். இசைஞானியார், இசையில் வல்லவரென்றே, அவர் திருக்குமாரர் தேவாரம் மொழிகின்றது. இச்சதிபதிகள் இல்லறத்தில் இனிதுவாழு நாளில், † அப்பர், சம்பந்தர் தேவாரங்களை நன்றாய்த் திருப்பண்கள் அமையப்பாடுவதில் பேரன்பு உடையாரென்றும், அவ்வாறு அவர்கள் செய்த தேவார பாராயணம் அவர் புதல்வர்க்குச் சிறுபோதிலே மனதைக் கவரச்செய்து அவரை அத் திருநெறிமய மாக்கியதென்றும் நம்பியாரூரர் தேவாரத்தினின்றும் அநுமானிக்கலாம்.

நல்லிசை ஞானசம் பந்தனு நாவுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி யேத்துகப் பானைத்
தொண்ட னேனறி யாமையறிந்து
கல்வி யன்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டியென் களைகளை யறுக்கும்
வல்லியல் வானவர் வணங்க நின்றானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே !

இவ்வாறு "இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்" பாடிய பாசுரத்தைக் காண்க.

வன்றொண்டர் தந்தையாகிய சடையனுரும் சிறந்த விப்பிரகுலத்தில் வந்தவரென்பதற்கு ஐயுறவில்லை. இதற்கு ஆதாரம் சுந்தரர் தேவாரம் :—

வருங்கல மும்பல பேணுதல் கருங்கடல்
இருங்குலப் பிறப்பர்த மிடம்வ லம்புரத்தினை
அருங்கு லத்தருந்தமி ழூரன்வன் றொண்டன்சொல்
பெருங்குலத் தவரொடு பிதற்றுதல் பெறுமையே.

* ஏற்ற பேதமன்று, முன்பின் என்பதை விளக்கும் அடைமொழியாம்.

† நற்றமிழ்வல்ல ஞானசம்பந்த னுவினுக்கரைய
னுளைப்போவானுங்
கற்றசூதனற் சாக்கியன் சிலந்தி கண்ணப்பன்
கணப்புல்ல னென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கைகண்டுநின் குரைகழலடைந்தேன்
பொற்றிரண் மணிக்கமலங்கண் மலரும்
பொய்கைசூழ் திருப்புன்கூருளானே.

நம்பியாரூரர் தந்தையிடத்திலே பக்தி அதிகமாயிருந்தும் அவரை 'ஆரனடியே அடைந்திட்ட சடையன்' என்றதாலும், பெரும்பாலும் இவர் திருக்கடைக் காப்புச்செய்யுளில் இசைஞானியைப்பற்றியே அதிகம் பாடுதலாலும் சுந்தரமூர்த்திநாயனுர் திருத்தொண்டர் தொகை பாடுவதற்குப் பலநாள் முன்னரே சடையநாயனுர் முத்திபெற்றனர் என்று நாம் அநுமானிக்கவேண்டும். (தொடரும்)

இலஞ்சிப் பாவை.

[13-வது பக்கத் தொடர்ச்சி]

II

பாவையைக் காணல்

வரையுறை தெய்வங்கொல் வானுறை
தெய்வங்கொ னீர்மணந்த
திரையுறை தெய்வங்கொ லையந்
தருமித் திருநதலை.

குதிரையை யிழுந்த வீரனுங் கன்றிய மனத்தினனுய்க் கவன்று, குரகதமின்றிக் குரங்கந் தொடர வலியற்று, கொன்னே குரைத்தோடும் நாய்களையழைக்கத் தன் துளைக்கருவியை முழக்கினுன். அம்முழக்கங்கேட்ட அசுழங்களும் வேகத்தில் தோற்றோமென வெம்பி, மனமின்றித் திரும்புவனபோல் மெல்லென மீண்டு, தலைவனது சினத்திற்கஞ்சிச் சிரத்தைத் தாழ்த்தி, நாலுகின்ற வாலுட னவன்காலை யண்டின. கானகத்திற் கேளாத இவ்வொலியைக்கேட்டுத் தூக்கத்தினின்றும் விழித் திங்குமங்கு மோடின ஆந்தைகள் சில; சிறகுகளை விரித்துக் கூவின கழுகள் சில. வீரனுந் தன்துணைவரை நாடி விரைந்தேகியும் பலமுறை வழியறியானுய்த் திகைத்து நின்றான். சூழ்ந்திருந்த கானகத்தின் வனப்பும் அவனைப் பன்முறை நிற்கச்செய்தது.

எழுந்த ஞாயிறு விழுகின்ற காலமாயதால், செந்நிறக் கொழுங்கிரணங்களை ஏற்றுச்சிவந்த மலைச்சிகரங்கள் யாவும் தீப்பற்றி யெரிவன போன்றன. ஆயினும் அவ்வொளி கணவாயின் வழியோடும் பாதையிலொருசிறிதும் பட்டிலது. அவ்வழிதானும், மரஞ்செறி பொழிலினூடும், மாமரக் காவினூடும், குடையெனக் கவிந்த குன்றங்களி னிடையும், இடிகொண்டுடைந்த பெரும் பாறைகளின் நடுவிலும், சுழன்று சென்றது. அப்பாறைகள் தாமும், குன்றுகளின் முகடுகளில் தோன்றியக்கால், கோயில்களின் தூபிகைகளெனத்திகழ்ந்தன. சிற்சிலவிடங்களிலவைகடியுடையழுவமெனக் கவின, அவற்றின்மேலிருந்த மல்லிகை சம்பங்கி முதலிய கொடிகள் அவ்வரணில் நிலவிய பாதகையெனப் பொலியலாயின.

நெடுவழி நடந்த வீரன்கண்களி லப்பொழிலினோர்சிறை யொருசிறு நீர்நிலை தோன்றிற்று. தொடக்கத்தில், வாத்துக்களுக்கும் நீந்தப்போதா வத்துறையும், சிலவிடங்களி லகன்றும், ஓரிடத்தில் மறைந்தும், மீண்டுந் தோன்றியபோது ஆழ்ந்தும் அகன்றுந் தென்பட்டது. உயர்ந்த பாறைகளும், நீண்ட மரங்களும் அதனுள் நிழல்காட்டி நின்றன. வீரனும் விரைந்து செல்லச்செல்ல, நீர்மேற் கவிந்த பாறைகள் நிலத்தினின்றும் விலகி நீர் சூழ்ந்து நிற்கவும், தனித்தனிப் பல பதுக்கைகள் பரந்தநீரிற் பிறங்கவும், மலையிற் பிரிந்த கற்பிளவுகள் நீரிடை யழுந்தித் திரைகளலைப்ப, அகழிசூழ் அரண்களெனப் பொலியவும், நீர்நிலையும் பெருகி யகன்றது. கணவாயினின்றும் வெளியேற வழியறியானுய் வீரனும், பாறைகளின்மேல் வளர்ந்துள்ள கொடிகளைப் பற்றியும், மரங்களின் முடிகொண்ட வேர்களிற் காலை யூன்றியும், கிளைகளைப் பற்றித் தாவியும் மலையி னடுக்கத்தோ ருயர்நிலையெய்தினுன். பரவையெனப் பரந்த வோர் இலஞ்சி இவன்முன் விரிந்து இரவியின் கிரணத்தால் உருக்கிய பொன்னெனப் பொலிந்தது. அவ்வேரியின் நாப்பண் குமரிக்கோட்டை யொத்த முனைகளும், இலங்கையென விலங்கு தீவுகளும், வில்லென வளைந்த நிலத்தின்பாங்கர்த் தோன்றிய வளைகுடாவும் விரிகுடாவும், வீரனை வியக்கச்செய்தன. அதனைச் சூழ்ந்து நின்ற மலைகளுங் குன்றங்களும், மாய வழியைக் காத்துநின்ற பூதங்கள்போன்று கண்டார் மனதைத் துணுக்குறச் செய்தன. மலைமீதேறிய வீரனும் பலபல நினைந்து பின்வருமாறு தன்னுளே பேசிக்கொள லாயினுன்.

" இது என்ன வனப்பு ! அரசரது ஆடம்பரத்திற்கும், மடாதிபதிகள் மகிழ்ந்துறைதற்கும் ஏற்றவிடம் இதனினு முண்டோ ? இதோ அருகிற் றோன்றும் மலைச்சரிவில் ஒரு அரணும், அக்கணவாயில் மாதருறையு மந்தப்புரமும், அதோ தோன்றும் புற்றரையில் ஒரு மடமும் கட்டுவித்தால் எத்தனை பொருத்தமாயவை யிலங்கும்! காலையில் வேட்டைக்காரர் ஊது குழைகள் இவ்விலஞ்சியின்மே லெத்தகைய நல்லோசை பயிலும்!'அந்தர் வந்தென அந்திதன் கைதர மந்த மந்த மணக்கும் வாடை' பொழிலெங்கும் ஓசையற்றிருக்கு மமயம் திவவுயாழின் இன்னிசையை யெங்ஙன மிங்கே பரப்பும்! நள்ளிரவில் நீலநிறங்கொண்ட விதன் நீரும் நிலவும் பயன்கொள்ள, தரங்கத்திற் புரளுஞ் சிறுமீன் வெள்ளித் துண்டெனத்துள்ள, மடத்தினின் றொலிக்கும் மணியும் மனதை யமைதியுறச்செய் ததனை இறைவ னிணையடி சேர்க்குமன்றோ? ஒருசமயம் மணியோசைகேட்டு மடத்தில் மாணியாம் வேடந்தாங்கும் மருவறு முனியும் விழித்து,மறைகளையாய்ந்து மகிழும். எங்ஙனமாயினும் துளைக்கருவியும், யாழும் மணியும் துணைவரைப் பிரிந்த வேட்டையாளருக்குத் துனிநீக்கிப் பல்லியமுழக்கி முகமன்கூறுமே!

அச்சமயமிங்குலவுவது இன்பத்தை யளிக்கும். இப்போ தென்செய்வது ? நல்லுணவில்லா முனியென யானும் சோர்வுற்று நடைமெலிந் தோர் ஞாழலினை மர்ந்து, கிழங்குகளை யுண்ணவேண்டும்; சருகுகளை

எனக்கு மஞ்சமாக வேண்டும்; காலி னசைதரு கிளையோ விண்ணே விதானமா யமையவேண்டும் அவை கிடக்கட்டும். வேட்டையிலும் வெம்போரிலும் இச்சிறு துன்பங்களைப் பொருட்படுத்த வேண்டா. வேனிற்காலத்துத் தருக்களின் நிழலில் உறங்குவதும் உவகையை யளிக்கும். ஆயினுமிம் மலைநாட் டாறலை கள்வர் கைப்படின் என்னிலை யென்னும்? மானும் போய், மாவுமிழந்து, மலையிடை மிலேச்சர் கைப்படுவது, நண்பர் நகைப்பதற் கிடனாகும். இதுபோது துளைக்கருவியை முழங்கிச் சிதறுண்ட என் கூட்டத்தாரைக் கூவுவதே சிறந்த கருமமாம். அவர் வராமல் மற்றெவர் வரினும் வருக; இதுவரை யான் எண்ணிறந்த இடர்களினின்றும் என் வாளின் துணைகொண்டு சிறிதும் ஊறுபடாது பிழைத்துள்ளேன். இந்நாள் நேர்வது நேரட்டும்'' என்று துணிந்து தன் ஊதுகுழலை யெடுத்து முழக்கினன்.

இரண்டாம்முறை கருவியை முழக்குவதன்முன், முன்சொன்ன நீலொன்றை யடுத்து, வானுறவோங்கி வளம்பெற வளர்ந்து, புனலிடைச் சினைகள் மூழ்கக் கவிந்திருந்த பெரியதோர் பழுமரத்தின்நிழலிலிருந்து கண்கவர் வனப்புடைக் கன்னிகை யொருத்தியாலுந்தவரு நவ்வியொன்று, அன்னப்பெடை சிறையிலதா யசைவதுபோ லிலஞ்சிமேல் வட்டமிட்டெய்திற்று. மரக்கல முகைத்த பொற்பின் பாவை புளின மேறுவதன்முன், வேட்டைவீரனும் மரச்செறிவில் மறைந்திவ் விலஞ்சிப்பாவையி னெழினலங் காணலாயினன். படகொடு நீர்க்கரையை யடைந்த மடமாதும், கண்ணிமைப்பொழு தசைவற்றிருந்து, பின் தலையைச் சாய்த்துச் சேய்மைக்கண்ணின்று வருமொலியைக் காதுகொடுத்துக் கேட்பவளாய்க், கண்ணும்மனமும் ஒருவழிசெல்ல, கரியகூந்தல் காலின் விசைகொடு முகத்தையலைப்ப, முத்தந்தோன்ற முறுவல் முளைப்ப, ஓவியப்பாவையெனவும், அவ்விலஞ்சித் தெய்வமே போன்றுந் தோன்றினள்.

உலகிற் சிறந்த ஓவியனெவனும், அவளை யொத்ததொரு வனப்புவாய்ந்த வனிதையை வரைந்ததுமில்லை. அவளது நிறத்தைக்கண்டு அழுக்காறுற்ற இரவி, வெண்ணிறத்திருமேனியைச் செந்நிற மாக்கினனேனும் அது அவளது ஆகத்தின் தவளத்தை அணங்குபெற வெடுத்துக்காட்டுவதற் கமைந்ததேயாயிற்று. அரச மாளிகையின் அந்தப்புரத்தி லுறையும் அரும்பெறற் பாவையரைப்போல் அழகொடும் அணவொடும் பயில அறியாளேனும், அவளது அடியினை நிலமாதும் வடுப்படுத்த அஞ்சி, அங்காத் தபருமு தேந்திச்செல்லும். செல்லுறு சிறு நடையால் மின்னென நுடங்கும் அவள் திருவுருவம். அவள் செல நிமிர்ந்துண்ட கொடியும் கொடியில் நின்று நிமிருமெனின், அடியின் நுட்பத்தை யறைவ தெவன்? மலையிடையுறைந்த வெள்மொழி திரைச்சொற்பயிலுமேனும், இரசித மணியென விலங்குமிவள் குதலைந் தழிவ ரிளையர்.

மாதரசியும் மன்னன்மக ளல்லளேனும் மலைத்தலைவர் பெண்ணொனெனத் தோற்றுவித்து நின்றாள். பட்டுத் துகிலும் பண்புடனணிந்த கலன்களும் உயர்குலத்தவ ளென்பதைத் தெரித்தன. கட்டுக்கடங்காக் கூந்தலும் சுருண்டு, களம்பழத்தினும் கரிதாய்க் காட்டிற்று. நகிலுற்ற நல்லாடையும் நன்கு போர்த்தப்பட்டு அவளது நாணின் பெருக்கத்தை விளக்கிற்று. மார்புறைவரு மடிப்புண்ட தூசு பொருந்தும் ஊசிமஞ்சும், மக்கள் கண்ணும் மனமு மிறக்கும் இழையாயிற்றன்றே. நெஞ்சமுற்றது காட்டுமுக மென்னில், உள்ளத்தி லுறைவதைத் தெள்ளிதி னுரைக்குமவள் கண்ணும். அவைதான் பொய்யும் படிறும் நீங்கிப் புனிதமுற்று, அடுத்ததைக் காட்டுமவ் விலஞ்சியினைப்பென, நெஞ்சிலுற்ற நவையறு மெண்ணங்களனைத்தையும் நவிலாநிற்கும். ஆயினும் பிறரறியாவண்ணம் மூடல் துன்றிநின்ற வெண்ண மொன்றுண்டு. அது இன்னதென வுரைக்கவும் வேண்டுமோ?

சில அரும்பதங்களின் பொருள்:—குர்கதம் = குதிரை. குரங்கம் = மான். அசுழம் = நாய். கடியுடை அழுவம் = காவலுடைய மலைக்கோட்டை. பதுக்கை = சிறுதிட்டை. இலஞ்சி = ஏரி. அந்தர் = குருடர். ஞாழல் = மயிர்க் கொன்றைச் செடி. மஞ்சம் = படுக்கை. கால் = காற்று. ஆறலை கள்ளர் = வழிபறித் திருடர். நவ்வி = ஓடம். புளினம் = மணல் மேடு. சேய்மை = தூரம். கால் = காற்று. தவளம் = வெண்மை. அணங்கு = அழகு. இரசிதம் = வெள்ளி. துகிர் = பவளம். நகில் = கொங்கை. மஞ்சு = ஆபரணம். படிறு = வஞ்சனை. அப்பு = நீர்.

கம்ப ராமாயணம்.

அயோத்தியா காண்டம்.

1. மந்திரப் படலம்.

(5 வது பக்கத் தொடர்ச்சி)

கடவுளென்ற கொள்கையைக் காத்தலி னவசியம்.

காப்பியத் தலைவனேயன்றி யேற்புடைக் கடவுளாயு மமைந்தவத் தனிப்பரம் பொருளைப் பாவுமோர் பாசுரத்தாலிவ் வயோத்தியாகாண்டம் துவக்குகின்றது. கருமமே கண்ணுய கம்பர் கதையினுட் புகுங்கால்,

வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊறு முயிரு முணர்வும்போல்
உள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயும்
கொடுமை யிழைப்பக் கோறுறந்து
கானுங் கடலுங் கடந்திமையோர்
இடுக்கண் காத்த கழல்வேந்தை

[கூனியும் சிற்றன்னையும் செய்த கொடுமையால் செங்கோலைத்துறந்து, காட்டையும் கடலையும் கடந்து தேவர்களது துன்பத்தைத்தீர்த்த வீரகண்டை யணிந்த வேந்தனாகிய இராமனை—ஆகாயத்தினின்று இறங்கி வரம்பற்றதாகிய ஐம்பெரும் பூதங்களின் இடமெல்லாம்,—வெளித்தோன்றும் ஊனைப்போலவும், உள்ளிருக்கும் உயிரைப்போலவும், அவ்வூன் உயிர் இரண்டும் இருக்கின்றனவென

அவ்வவர்க்குத் தெரிவிக்கின்ற உணர்வைப்போலவும்—உள்ளும் புறமும் இருப்பவன் என்று மெய்யறிவுடையோர் கூறுவார்]

என்று பரம்பொருள் தன்மையை முதலிலும், இராமனது செய்கையை அதற்கடுத்தும் செப்பி, இச்செயல் செய்தவன் அப் பரம்பொருளே யென அளமறிபாப்பு அரிதின் அமைத்தனர். தயரதன் மதலையாய்த் தோன்றிய பண்ணவன், நடித்தவைகளிற் பல மானுடமரபிற் கிணங்கியுள வாயினும், இதனால்அவன் முற்றிலும் மானுட வொழுக்கமே பூண்டு அலகிற் கடங்கிய வோர் தன்மையைத் தாங்கலாயினன் என்று எண்ணப்புகுவது நேரிதன்றெனுங் கருத்தினர் கம்பர். இப் புலவர்பெருமானது நூலின் மேன்மையை யறிந்த பயன் அடையவேண்டுமெனின், வேந்தனுய் வந்த இராமன், அலகிலா விளையாட்டுடைய ஆதியம் பரமன் என்பது மாத்திரமன்றி, அப்பரமனுகவே இருந்து அவ்விளையாட்டுகளையே கோசலை மணிவயிறு வழியாக அவதரித்தபின்னும் நிகழ்த்தினனென்பதும் நினைவினின்று ஒருபோதும் நீங்கலாகாது. நீங்கிடிலோ நேரும் பிழை பெரிதாகும். மைந்தனுய் மாணியாய் உடன்பிறந்தானுய்க் கணவனுய் நண்பனுய்ப் பகைவனுய் வேந்தனுய் மானுடர்க்குரிய பல்வேறு முறைகளின் நெறிபற்றி உலகிற்கு நடந்து காட்டி யறிவுறுத்த எம்பிரான் இராமனுயவதரித்தனன் என்பது உண்மையின் ஒருபாகமேயாகின்றது. இவைபோன்ற முறைகளில் மானுட தருமம் நடத்தினோர் இராமனுக்கு ஈடெனத்தகுவோர் பலர் இருந்தனர். வாய்மை வண்மை வீரம் அன்பு முதலிய குணங்களில் தயரதன் யாருக்குங் குறைந்தவனல்லன். வேறுபல வேந்தர்களும் மங்குனரின்றி மிக விளங்கினவர்களே. ஆதலின், அறத்தாறொழுகிக் காட்டியது இராமாவதாரத்தின் சிறப்பென் றுரைத்தலமையாது. தயரதன் மதலையாய் இத் தரணிவந்து எம்பெருமான் இயற்றிய சரிதத்தில், தான் அத் தனிப் பரம்பொருளே என்னுந் தன்மையிலேயே இயங்குகின்றான். கடவுள் தன் கருத்தை நிகழ்த்தி வைக்கின்ற வண்ணத்தைக் காட்டுவதிற்றான் கிருஷ்ணவதாரத்தைப்போல் இராமவதாரத்தின் பெருமையும் அடங்கியிருக்கின்றது. இம்மெய்ம்மையை நினைவுறுத்தற்கே கம்பர் இக்காண்டத்தின் தலைப்பில் கடவுள் வாழ்த்து இன்னபடி பாடினரென்றறிதல் வேண்டும். கடவுளை இவனென்ற பான்மையை அயர்ந்து மனிதனென்று மதிப்பவர் பற்பல இடங்களி லிடறுறக் காண்பர். மனிதர்க்கியன்ற குணம் செயல் நோக்கங்களால் அவனை மதித்தலாகாது. இன்னதனை முன்னரே உலாவியற் படலத்தில் கண்டோம். இயற்கைவிதிகளுக் கெதிர் செயற்கைச்சாதனங்களில்லாமைபோல் பரமனுக்கு முன்னே அவன் படைப்புலகத்தி லெல்லைக்குட்பட் டியங்கும் விதிகள் செல்லா வென்பதை இராமன் அங்குக் காட்டினன். பள்ளத்துப்பாயும் நன்னீரனையராய் மாதர், இராமன்பால் தம்முணர்வைச் சேர்த்த கொள்கை, கடவுள் தன்மையால் நிகழ்ந்ததென் றோராராயின், மெய்யுணர்விலும் வன்சொல்வழங்குதலே மிகுதியாய்ப் பயின்றுள்ள ஆங்கிலப்புலவன் அலக்ஸாண்டர் போப் (Alexander Pope)என்பானொருவன், 'வனிதையராயினோரெலாம் உள்ளத்தால் வசவியரே யாவர்' (every woman is a rake at heart) என்று அவதூறு இயம்பிய இலக்கணத்திற்கு அவ்வுலாவியற்படலமும், அதுபோல் அயோத்தியில் நிகழ்ந்தவைகளும் இலக்கியமாய் நிற்கின்றனவோ வென்னுமோர் படுகுழி யெண்ணம் பாய்ந்து மலங்குவார் மாந்தர். அன்னவா றேதமொன்றும் நிகழாமற் காக்கவே கம்பர், கூனும் சிறியகோத்தாயுங் கொடுமை யிழைப்பக் கோல் துறந்து கானுங் கடலுங் கடந்து இமையோர் இடுக்கண் காத்த கழல் வேந்து, மாபூதத்தின் வைப்பெங்கும் உள்ளும் புறத்தும் உளனுப பெற்றியை நாம் சிந்திக்கும்படி செய்கின்றார்.

ஆயினும் இராமன் தான் மானுடமகன் என்ற பாவனையில் நடித்தனவும் இச்சரிதத்தில் இலவாகா. எல்லாமறிந்த இவன் கோசிகன்பின் போனபோது ஒன்று மறியான்போல் 'இதுவென், இதுவென்'' என எதிர்ப்படும் பொருள்களை வினவலுற்றதும், அகலிகையின் சரிதத்தை வியப்புடன் கேட்டதும், கருங்கடற் பள்ளியில் கலவிநீங்கிப் போய்ப் பிரிந்தவர் நமை கூடுகின்றார்கள் ஆனபோதிலும் சீதைபால் இராமன் காதல் புதியதா யுற்றான்போல் பிரிவாற்றாது இரங்குவதும், பின் அவளைப் பஞ்சவடியில் இழந்தபோது தனித்துயர்கொண்டு புலம்புவதும், பிரமாத்திரத்தால் வீழ்ந்த தன் தம்பி இலக்குமணனை நோக்கிக் கலுழ்வதும், நாகாத்திரத்தால் தானே கட்டுண்டு கிடப்பதும், குரக்கினத்தவரோடு நட்புக்கொண்டு படைத்துணை பெறுவதும், இவையெலாம் கதையினிற்காக எம்பிரான் நாடக நிகழ்ச்சியாய் நிறைத்தனவன்றி அவர்கருமத்திற்குஇன்றியமையாதனவாய் நிகழ்ந்தன வல்ல. அலகிலா அவர் விளையாட்டுகளில் இவைகளுஞ் சில. இராவணனை வதைத்து இமையவர் இடுக்கண்களை இவ்வகையில் தீர்க்கவேண்டுமென்று உளங்கொண்டாரென்று உரைக்க இயலுமல்லால் என் இவ்வண்ணம் இக்கருமத்தைப் புரிந்தனர், சிவனுய் நின்று திரிபுரம் எரித்ததுபோல் நேராகத்தான் திருமாலாய் இராவணனை ஒறுத்திலர், என்பதற்குக் காரணம் இயம்புதற் கியலாது. தன்பால் குற்றம் இழையாதானைத் தண்டித்தல் தருமமாகாதென்னும் நீதிபற்றியோ முன்னேற்பாடாகச் சீதையை இராவணன் கவரும்படி செய்தார் என்ற எண்ணத்தை அவர் வாலியைக்கொன்ற செய்தியுங் காரணமும் மறுக்கின்றன. இராமன்பால் வாலி ஒரு பிழையு மிழைத்திலன். அவனை வதைசெய்த வண்ணமே இராமன், விண்ணும் மண்ணும்செய்தவமிழக்கும்படி புரிந்துவந்ததீச்செயல்களுக்காக இராவணனையுந் தண்டித்திருக்கலாம். அவ்வாறின்றிக் கூனுஞ் சிறியகோத்தாயுந் தனக்குக் கொடுமை இழைக்கும்படி செய்து, அதன் காரணமாகக் கோல் துறந்து, கானஞ்சென்று, அங்குச் சீதையை இராவணன் கவர்ந்துசெல்வதற் கோர் செவ்வி அமைத்துத்தந்து, அதன்மேல் அரக்கர் குலத்தை நீறுசெய்ய இராமன் நினைத்தது ஏனெனத் தெரிந்து செப்பவல்லார் யாருளர்! இவைகளைக் கருதுவார், ''திருவுளத்தின் வண்ணம் அறிகிலேன்'' என்று இயம்புதலே வேண்டும். இந்த வகையில் கடவுள் அந்தத்தில் குறித்தசெய்கை முடிக்கும் நெறி இன்னதெனத் தேரமாட்டாமையும் இவ்வாழ்த்துச் செய்யுள் வலியுறுத்தி நிற்கின்றது.

செய்கையா லிவ்வகைத் திகைப்புறப் புரிபவன், தன்மையாலு மவ்வாறே அமைகின்ற னென்பதை,

ஒன்றே யென்னி னொன்றேயாம்
பலவென் றுரைக்கிற் பலவேயாம்
அன்றே யென்னி னன்றேயாம்
ஆமே யென்னி னாமேயாம்
இன்றே யென்னி னின்றேயாம்
இலதென் றுரைக்கி னிலதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா !

என உயுத்தகாண்டக் காப்புச்செய்யுளில் கம்பர் பாராட்டுகின்றனர். அனைத்துமாய் அல்லவுமாய் ஒரு பாற்படாத பெற்றியனை திருமால் இராமனாய் வந்து அரக்கரைத் தீவினை செய்தவரென்று ஒறுத்ததன் தத்துவந்தான் என்னையோவென நினைப்பார் மனத்தில்,

நாழி நவைதீ ருலகெலா மாக
நளினத்து நீதந்த நான்முகனார் தாமே
ஊழி பலபலவு நின்றளந்தா லொன்றும்
உலவாப் பெருங்குணத்த வுத்தமனே மேனாள்
தாழி தரையாகத் தண்டயிர் நீராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
ஆழிகடைந் தமுத மெங்களுக்கே யீந்தாய்
அவுணர்கடா நின்னடிமை யல்லாமை யுண்டோ

என்றும்,

ஒன்றாகி மூலத் துருவம் பலவாகி
உணர்வு முயிரும் பிறிதாகி யூழி
சென்று சறுங்காலத் தந்நிலை யதாகித்
திறத்துலகந் தானாகிச் செஞ்சவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே நங்கள்
நவைதீர்க்கு நாயகமே நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி யயற்பேரைக் காய்தி
நிலையில்லாத் தீவினையு நீதந்த தன்றே

என்றும், இந்திரன் இராமபிரானை ஆரணியத்தில் கண்டு துதித்த சொற்கள், ஐயமே பின்னும் பெரியதாய்ப் பெருக்கி வைக்கும்.

ஆதலால், இவ்விராமாயணம் என்பது, மாநுட நீர்மையின் மாண்பினை யுரைப்பதெல்லாம் சிறிய செய்திகளே. எம்பெருமான் இருப்பதுவும் நிகழ்வதும் இன்னபடியெனத் தேர இயலாமையோடு, அவர்பால் நெஞ்சம் நெக்குருகி யீடுபடற்கு இத்தெருட்சியின்றியமையாத தன்றென்பதையும் நம்மனம் உட்கொள்ளுமாறு கம்பர் தம் காப்பியத்தைப் பாடியுளார். இடைவிட்டகலாது இத்திப்பிய காப்பியத்தைப் பயின்று வருவார்,

நீயாதி பரம்பரமு நின்னவே யுலகங்கள்
ஆயாத சமயமு நின்னடியவே யயலில்லை
தீயாரி னொளித்தியால் வெளிநின்றாற் றீங்குண்டோ
வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ.

என்றும்,

தாய்தன்னை யறியாத கன்றில்லை தன்கன்றை
ஆயு மறியு முலகின்றா யாகினைய
நீயறிதி யெப்பொருளு மவையுன்னை நிலையறியா
மாயையிது வென்கொலோ வாராதே வரவல்லாய்.

என்றும், விராதனுடன் சேர்ந்து பூரித்த தம்முள்ளத்தால் புகலாரோ ! புகன்று, "அருவினையாகி அருவினைப்பயனாய் அருவினை அனுபவிப்பவனாய், அருவினையாக்கி அருவினை அறக்கும் அற்புதா, யாருனை யறிவார்" என்று தம்மையும் தம் வினையையும் 'கிருஷ்ணார்ப்பணம்' என்று அவனுக்கே அடைத்துவிட்டால் 'அக்ஷயம்' என்றவன் யாவையும் அருளானோ !

கலா நிலய வாழ்த்து.

நேரிசை யாசிரியப்பா.

வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கு
மொப்பறு மிமயமுந் துப்புறு கடலு
நாற்புற வெல்லையா வேற்புடைத் தாகிப்
பால்சுரந் தூட்டுஞ் சால்பமைத் தாயெனப்
புயல்பொழி நன்னீர் நயனுற வூட்டி
நெல்வள முதலாப் பல்வளங் கெழுமி
இருவகை வனப்பு மொருபாற் கொண்டு
நான்மறை யறநூல் வான்விரி யெண்ணெண்
கலைக டத்துவம் பலவா யைவகை
இலக்கண மமைந்த யிருளழி பெருங்கதை
சிலவன் றாகிச் சிறப்பு மூன்றொடும்
பதினெண் மொழியெனப் பாகுபா டுடைத்தாய்
மதியுடை மாந்தர் மறைமொழி நாற்பொருள்
பல்வினைச் சமயப் பலருஞ் செழிக்க
வில்கொடுத் துதவி யேற்ற பெற்றியின்
காத்திடு பாரத வன்னையின் கண்ணென
நாத்தடை யின்றி நவிலத் தக்க
கண்கவர் வனப்பின் விண்பொர நிவந்து
மதியை முட்டுஞ் சுதையொளி மாடம்
எண்ணில நிரைஇய கண்ணகன் முன்னீர்க்
கலந்தரு வளனு நிலந்தரு வளனுங்
கொண்டு பகரும் பண்டமாற் றொலியுங்
காலிற் செல்வோர் கருவியிற் சேர்வோர்
பாலிற் போவோர் பயனிற் சார்வோ
ரூர்தியி னூர்வோ ருவகை யார்ப்பும்
சீர்மிகக் காண்போர் செறிந்த கம்பலையும்
பார்பொரு திரங்கும் பரவை யொலிக்கு
மாறுகொண் டோங்கி வீறுறப் பொலியு
மறாஅ யாண ரகன்பெரு மறுகு
செறிந்த மாலைச் சென்னையம் பதியில்
விரைமிக வோங்கும் புரசை வாக்கத்தில்
வண்ணமிழ் தன்னத் தண்டமி ழோர்க்கு
மனவிரு ளகன்றே யினவொளி வீசப்
பல்பெரு நூற்களில் மல்கிய பொருளை
யாடியி னன்ன வனைவரு மறிய
நாடிடு மறிஞரா னன்கு விளக்கித்
தீட்டிய நுட்ப திட்பக் கட்டுரை
யுட்பொரு ளோடே யுள்ளகத் தடக்கியும்
பேணும் பாடம் மாணவர்க் கூக்கியும்
பழமையும் புதுமையும் பண்பு மேம்படி இத்
தழைநூற் பொருளைத் தமிழிற் கொண்டு
மூலக வறிவு மிலகி யோங்கிக்
கற்போ ருளத்தைப் பொற்பா னீர்க்குங்
கலாஅ நிலயக் கவின்பெறு பெயரான்
நிலாஅ மணியென வுலாஅஞ் சீரிய
தமிழக வொளியே யமிழ்துகு கனியே
வாழிய பன்னாள் வாழிய நின்னைக்
காமுறு வோரு மேமுறப்
பன்னெடுங் கால மொன்றென வாழியே.

R. முத்தையர், தலைமைத் தமிழாசிரியர்,
ஸ்ரீ மந்திரமூர்த்திப் பாடசாலை,
திருநெல்வேலி.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை. ரூ. 1–8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருத்தப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமா யிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி
மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK

BY
Mudaliar C. RASANAYAGAM, C. C. S.
With a ForeWord By
Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—
KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF. BENOY KUMAR SARKAR, M.A. **Rs. 4**

ECONOMIC DEVELOPMENT :

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8.**

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1.8**

HINDU-PAD-PADASHAHI :

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR. M.A., Ph. D., Dacca. **Rs. 3**

ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA

by V. V. OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V V. Oak, has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION

by MANGALVEDKAR, *3rd revised edn.* **Rs. 2**

DIALOGUE DIVINE AND DRAMATIC

by GITANANDA BRAHMACHARI **Re. 1**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம். ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் ... 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் ... 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் ... 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் ... 0 5 0
8. கப்பர் அல்லது கவியரசு - ஆ. நா. கன்னையா ... 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண விஞவிடை கா.ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி ஜயராம ஐயர் ... 0 5 0
11. வலிவிக்ஸ் துரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிரமணிய ஐயர் ... 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பரசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே.பி சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன்–S. சீனிவாசையர்... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **TheNew Era Story Books Series,** Book 1 by C. Gordon, B Ed. **As. 3.**
22. Book II „ **As. 4.**
23. Book III „ **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T. **As. 3.**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A. **As. 6.**
27. **The Clay Cart** (In the press) **As. 6.**

(V. P. Charges, Extra of the Prices.)

B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.

வர்த்தமானம்

சென்னை, கல்கத்தா, லாகூர் இந்த இடங்களில் 1927, 1928, 1929-ம் வருஷங்களில் கூடிய காங்கிரஸ் மகாசபைகள் செய்திருக்கும் தீர்மானங்களின் விவரங்களைச் சுதேசமித்திரன் பத்திரிகை கீழ்க்கண்டபடி தொகுத்துப் பிரசுரஞ் செய்திருக்கின்றது.

சென்னைக் காங்கிரஸ் தீர்மானம்.

இந்திய மகா ஜனங்களின் லக்ஷியம் பரிபூரண தேசிய சுயேச்சையென்று இந்தக் காங்கிரஸ் அறிவிக்கிறது.

கல்கத்தாத் தீர்மானம்

இந்தக் காங்கிரஸ் சர்வகட்சிக் கமிட்டி ரிபோர்ட்டில் சிபார்சு செய்திருக்கும் அரசியல் திட்டத்தைக் கவனித்து, இந்தியாவின் ராஜீயசமூகப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு அது ஒரு நல்ல வழிகாட்டியென்று நினைத்து அதை வரவேற்பதோடு, அதன் கர்த்தர்கள் ஏகோபித்து அந்தத் திட்டத்தைச் சிபார்சு செய்திருப்பதற்கு அவர்களைப் பாராட்டுகிறது. சென்னைக் காங்கிரஸ் பூரண சுயேச்சை விஷயமாகச் செய்திருக்கும் தீர்மானத்தை இக்காங்கிரஸ் ஆதரித்து நின்றபோதிலும், இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சியினரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாக நேரு கமிட்டித் திட்டம் இருப்பதால் அது ராஜீயத் துறையில் விசேஷ அபிவிருத்தியை ஏற்படுத்துவதாக இருப்பதை முன்னிட்டு அதை ஒப்புக்கொள்ளுகிறது தேசத்தில் ஏற்படும் ராஜீய நிலைமைக்குட்பட்டு, பிரிட்டிஷ் பார்லிமெண்டார் அந்தத்திட்டத்தை அப்படியே 31-12-1929-க்குள்ளாவது அதற்கு முன்னராவது ஒப்புக்கொண்டு விட்டால், அதைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளும். ஆனல் அந்தத் தேதிக்குள் அது ஒப்புக்கொள்ளப்படா விட்டாலும் அல்லது அதற்கு முன்னதாக அது நிராகரிக்கப்பட்டுவிட்டாலும், வரிகொடாமலிருக்கும்படி ஜனங்களுக்கு உபதேசம் செய்தும், மற்றும் தீர்மானிக்கப்படும் இதர வழிகளிலும் காங்கிரஸ் பலாத்காரமற்ற ஒத்துழையாமையி லிறங்கும். இதற்கு எவ்விதவிருத்தமுமின்றிக்காங்கிரஸின் பெயரால் சுயேச்சைப் பிரசாரம் செய்வதை இத்தீர்மானத்தில் கண்ட எதுவும் தடைப்படுத்தாது.

லாகூர் தீர்மானம்.

குடியேற்றநாட்டு அந்தஸ்து விஷயமாக ராஜப் பிரதிநிதி அக்டோபர் மாதம் 31-ந்தேதி வெளியிட்ட அறிக்கையின் பேரில் இதர கட்சித்தலைவர்களுடன் காங்கிரஸ் வாதிகளும் கையெழுத்துச்செய்து ஒரு அறிக்கை வெளியிட்டதன் சம்பந்தமாகக் காரியக் கமிட்டி செய்த காரியத்தை இந்தக் காங்கிரஸ் அங்கீகரிப்பதோடு, இந்திய தேசிய சுயராஜ்ய இயக்கத்தைத் திருப்திகரமான வழியில் முடிவுக்குக்கொண்டு வருவதற்கு ராஜப்பிரதிநிதி செய்துள்ளமுயற்சிகளைப் பாராட்டுகிறது.

இருந்தாலும், இப்பால் நடந்துள்ள சம்பவங்களையும் மகாத்மா காந்தி, பண்டித நேரு, இதர கட்சித் தலைவர்கள் இவர்கள் ராஜப்பிரதிநிதியுடன் நடத்திய சம்பாஷணையின் முடிவையும் கவனித்ததில், உத்தேச சர்வகக்ஷி மகாநாட்டில் கலந்துகொள்வதால் எவ்வித அனுகூலமும் ஏற்படாதென்று அபிப்பிராயப்படுகிறது.

ஆகவே இந்தக் காங்கிரஸானது சென்ற வருஷத்தில் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் செய்த தீர்மானத்தை அனுசரித்துக் காங்கிரஸ் அமைப்பின்முதலாவது பிரிவில் உபயோகித்திருக்கும் "சுயராஜ்யம்" என்ற பதத்திற்குப் பூர்ண சுயேச்சையென்றே அர்த்தம் என்று அறிவிக்கிறது. அதனுடன் நேரு கமிட்டி திட்டம் காலாவதியானதாகிவிட்டதென்று அறிவிப்பதோடு, எல்லாக் காங்கிரஸ் வாதிகளும் இனிப் பூரணசுயேச்சையைப் பெறுவதற்காகத் தங்களுடைய காலம் முழுவதையும் செலவிடுவார்களென்று எதிர்பார்க்கிறது.

பூரண சுயேச்சை இயக்கப் பிரசாரத்தை ஆரம்பிப்பதற்குப் பூர்வாங்கமாகவும் காங்கிரஸின் லக்ஷியந் திருத்தியிருப்பதை அனுசரித்துக்காங்கிரஸ்கொள்கையிருந்துவரும்படி செய்வதற்காகவும், மத்திய சட்ட சபை, மாகாண சட்ட சபைகள் கவர்ன்மெண்டால் அமைக்கப்பட்டுள்ள கமிட்டிகள் இவைகளைக் காங்கிரஸ் பஹிஷ்கரித்துவிட வேண்டுமென்று தீர்மானிப்பதோடு, காங்கிரஸ்வாதிகளும் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் மற்றோரும் இனித் தேர்தல்களில் சம்பந்தப்படாமலிருக்கும் படியும், இப்பொழுது சட்ட சபைகளிலும் கமிட்டிகளிலும் ஸ்தானம் வகித்து வருவோர் அவைகளை ராஜிநாமாச் செய்துவிடும்படியும் கேட்டுக் கொள்ளுகிறது.

காங்கிரஸின் நிர்மாண திட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்றி வைக்கும்படி இந்தக் காங்கிரஸ் தேசத்தாரைக் கேட்டுக்கொள்வதோடு அதற்கு யுக்தமாகத் தோன்றின் குறிப்பிட்ட இடங்களிலோ அல்லது வேறுவிதமாகவோ, தகுந்த பாதுகாப்புகளுக்குட்பட்டு வரிகொடாமை யுள்ளிட்ட சாத்வீகச் சட்ட மறுப்பை நடத்திவைக்க அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கிறது.

சாத்வீக சட்ட மறுப்பைப்பற்றிப் பத்திரிகை பிரதிநிதிகளுக்கு மகாத்மாகாந்தி சமீபத்தில் கூறிய விவரம் பின்வருமாறு:—

189086

ஜனங்களைச் சட்டமறுப்பில் தயார் செய்வதற்குப் பிரசாரம் செய்யும்பொருட்டே, ஸர்தார் வல்லபாய் படேலும், ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியாரும், காங்கிரஸ் காரியகமிட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். இன்னும் சிறிது காலத்திற்குள் தக்கதிட்டங்கள் ஏற்படுத்திவைத்து இரண்டு மூன்று இடங்களில் சாத்வீக சட்டமறுப்பு ஆரம்பமாகும். அப்பொழுது, முன் சௌரிசௌராவில் நடந்ததுபோல் பலாத்காரமான காரியங்கள் நடைபெறாமல் இருக்கத்தகுந்த ஏற்பாடுகள் செய்ய இருக்கிறேன். அப்படி நடந்தாலும் இப்பொழுது சட்ட மறுப்பை நிறுத்தி விடுவதென்கிற உத்தேசம் இல்லை சட்டமறுப்பை நடத்திவைக்கக் காங்கிரஸ் ஆரம்பம் செய்துவிட்டால், பிறகு நீதிஸ்தலங்களையும் பள்ளிக்கூடங்களையும் பகிஷ்காரம் செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது. இந்தியா சுயேச்சை யடையவேண்டுமென்ற காங்கிரஸின் முயற்சி ஹிம்சை கோஷ்டியினருக்கு எவ்வித ஆதரவையும் அளிக்காது.

காங்கிரஸின் தீர்மானத்திற் கிணங்க, ஸ்ரீமான் மோடிலால் நேரு, ஸ்ரீமான் எஸ். ஸீனிவாச ஐயங்கார் முதலிய பல தலைவர்கள் சட்ட சபைகளில் தங்கள் பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டனர்.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்லன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஓயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப்படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	8	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)